விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 173 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 27 புதன்கிழமை (10.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## விசாரணைக்கு ஒத்துழையாமையால் சுரேஷ் சலே மீது சந்தேகம் எழுகிறது

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் மூன்றாவது சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள சுரேஷ் சலே விசாரணைகளுக்கு ஒத்துழைக்க மறுப்பதனால் அவர் மீதான சந்தேகம் வலுக்கிறது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்றைய தினம் (9) அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போது,

அங்கு கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே சுகாதார மற்றும் ஊடக 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் நேற்றும் 9 என்புக்கூடுகள்



02ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் அரசு உறுதியாக உள்ளது

### பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க



*(கொழும்பு)*

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் பொது அவசர காலநிலையினையும் நாட்டின் ஜனநாயகத்தை மீறுவதற்காக அரசாங்கம் ஒருபோதும் பயன்படுத்தாது என தொழில் பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலநிலை மேலும் நீட்டிப்பு

(கொழும்பு)

நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பொது அவசரகால நிலையை மேலும் நீடிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் 128 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கான வாக்கெடுப்பு 15ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கி இளைஞன் உயிரிழப்பு



(தருமபுரம்)


தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி நாதன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தனியார் கடைச்சல் 15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவுக்கு 16 ஆண்டு கடூழியச் சிறை



15ஆம் பக்கம் பார்க்க

## சிறுவர் துஷ்பிரயோகம் புரிந்த குற்றவாளிகளுக்கு தண்டனை



(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகக் குற்றவாளிகளை எமது அரசாங்கம் ஒருபோதும் பாதுகாக்காது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

15ஆம் பக்கம் பார்க்க

## சுரேஷ் சலே விவகாரம் சி.ஐ.டியிடம் விசாரணை

### மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்தும்

(கொழும்பு)

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே மீதான விசாரணைகள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளை இந்த வாரத்திற்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

### பாடகர் சங்கீத்தன் விவகாரம்

## பொலிஸ்மா அதிபர் - சட்டமா அதிபர் இடையே விசேட கலந்துரையாடல்

### பொதுப் பாதுகாப்பு அமைச்சர் விஜேபால



(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி பாடகர் சங்கீத்தன் தொடர்பில் பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபருடன் கலந்துரையாடவுள்ளார் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## நான் சிறைவாசம் செல்ல சுரேஷ் சலேதான் காரணம்

### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா



(கொழும்பு)

என்னைக் கைது செய்து, சிறையில் அடைப்பதற்கான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கியது சுரேஷ் சலே தான் என்று ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா 16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் எப்பாகத்தில் இருந்தாலும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பேன்

## சிறீதரன் எம்.பியிடம் சுவிஸ் தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தனது பதவிக்காலம் நிறைவடைந்ததன் பின்னரும் உலகின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான நியாயமான அரசியல் தீர்வை இலக்காகக் கொண்ட முயற்சிகளுக்கு தொடர்ந்து என்னால் இயன்ற பங்களிப்புக்களை வழங்குவேன் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் சுவிஸர்லாந்து தூதுவர் சிரி வோல்ற் உறுதியளித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் இலங்கைக்கான சுவிஸர்லாந்து தூதுவர் சிரி வோல்ற் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது நாட்டின் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரம், மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் ஜனநாயக முன்னேற்றம் என்பவற்றுக்கு ஆற்றிய பங்களிப்புகளுக்காக சுவிஸர்லாந்து தூதுவருக்கு சிறீதரன் நன்றி தெரிவித்ததுடன், நினைவுச்சின்னம் ஒன்றையும் வழங்கிக் கௌரவித்தார்.

அதேபோன்று தமிழர்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைகளுக்கான நிலையான அரசியல் தீர்வை எட்டும் நோக்கில் தூதுவர் சிரி வோல்ற் அவரது பதவிக்காலத்தில் முன்னெடுத்த சமாதான மற்றும் நல்லிணக்க முயற்சிகளையும் சிறீதரன் நினைவுகூர்ந்தார்.

அதற்குப் பதிலளித்த தூதுவர், இலங்கையில் தனது பதவிக்காலம் நிறைவடைந்தாலும் உலகின் எந்தப் பாகத்தில் நான் இருந்தாலும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான நியாயமான அரசியல் தீர்வை இலக்காகக்கொண்ட முயற்சிகளுக்குத் தொடர்ந்து இயன்ற பங்களிப்புக்களை வழங்குவேன் என உறுதியளித்தார். (ந-7)

# நல்லைக் கந்தனுக்கு சகஸ்ர சங்காபிஷேகம்

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக தினமான இன்று நல்லூர் கந்தப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சகஸ்ர சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் இன்று அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து காலை 7.00 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும்.

மாலை 4.30 மணிக்கு சண்முகப்பெருமானின் திருக்கல்யாண வைபோகமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# அதிபர்களின் நீண்டகால சம்பள முரண்பாட்டிற்கு தீர்வு

## புதிய சுற்றுநிருபம் வெளியீடு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவையின் சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்கி, அவர்களின் ஆரம்பச் சம்பளப் படியை முறைப்படுத்துவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் 03/2014 (I) என்ற புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2026 மே மாதம் 11ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட அனுமதியின்படி இந்தப் புதிய சம்பளத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பதவியுயர்வாகக் கருதி சம்பளத்தைக் கணக்கிட அனுமதி; இதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த 03/2014 சுற்றறிக்கையின் 01 ஆம் பிரிவும் அதன் உப பிரிவுகளும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதற்குப் பதிலாக, நிறுவனக் கோவையின் முதலாம் தொகுதியின், VII ஆம் அத்தியாயத்தின், 05 ஆம் பிரிவின்படி புதிய பிரிவுகளைப் பிரதியீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திருத்தத்தின்படி, இனிவரும் காலங்களில் அதிபர்களின் சம்பளக் கணிப்பீட்டை "ஒரு பதவியுயர்வாகக் கருதி" மேற்கொள்வதற்கான தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ந-7)

# 18 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் 18 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, இன்று (10) முதல் இந்தப் புதிய விலை திருத்தங்கள் அமுலுக்கு வரும் என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரிய வெங்காயம், வெள்ளைச் சீனி, பருப்பு, தட்டைப் பயறு, கடலை, பாசிப்பயறு, கொண்டைக்கடலை, கோதுமை மா, சிவப்பு பச்சரிசி, சிவப்பு நாட்டரிசி, சம்பா அரிசி, வெள்ளை நாட்டரிசி, பொன்னி சம்பா உள்ளிட்ட 18 வகையான பொருட்கள் இந்த விலைக்குறைப்புப் பட்டியலில் அடங்குவதாக அமைச்சு கூறியுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் யுத்த சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் இப்பொருட்களின் விலைகளைக் குறைக்கத் தீர்மானித்துள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.(ந-7)

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 - 05 - 1947



மறைவு 09 - 06 - 2026

## செல்வி அப்புத்துரை ராஜினி

**(ஓய்வு பெற்ற மொழி பெயர்ப்பாளர் – உயர் நீதிமன்றம், யாழ்ப்பாணம்)**

யாழ்ப்பாணம் கோப்பாய் சோனெமுவையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அப்புத்துரை ராஜினி அவர்கள் நேற்று 09.06.2026 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - தங்கம்மா தம்பதிகளின் ஏக புத்திரி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.06.2026 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் திருநாவலூர், புலோலி மேற்கு பருத்தித்துறையில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருநாவலூர்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்:
சி.ப.ஆறுமுகநாதன் (பெறாமகன்)
0777 854 924

(2404)

# செம்மணியில்...

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளப்படுத்தப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 327 ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வின் 20ம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய பணிகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த சட்டத்தரணி ரஜிதா,

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றனர்.

ஏற்கெனவே அடையாளப்படுத்தப்பட்ட சிறுவர்களுடைய 08 என்பு கூட்டுத் தொகுதி உட்பட 09 என்பு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேலும் சிறுவருடைய என்புக் கூடு உட்பட 09 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றைச் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறுவர்களின் வயதெல்லை ஆய்வின் பின்னரே தெரியவரும்.

அதேவேளை அகழ்வுப் பணியின்போது என்புக் கூடொன்றின் மீதிருந்து நாணயக் குற்றி ஒன்று மீட்கப்பட்டு , சான்றுப் பொருளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் செம்மணியில் இதுவரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின் போது 327 மனித என்புக் கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், 311 என்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

இன்றைய தினமும் 21 ஆவது நாளாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீண்டும் சரிவை நோக்கி இலங்கை ரூபா

(கொழும்பு)

**அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.**

இதன்படி, மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள தினசரி நாணய மாற்று விகித அறிவிப்பின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 332.38 ரூபாவாகவும், விற்பனை விலை 342.08 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

கடந்த (03) புதன் கிழமைக்குப் பின்னரான ஒரு வார காலப்பகுதியில், இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலைகள் அதிகூடிய பெறுமதியை எட்டியிருப்பது நேற்றைய தினமே யாகும். (நி)

# 2 எரிபொருள் கப்பல்கள் நாட்டிற்கு வருகை



(கொழும்பு)

இலங்கைக்கு இன்றும் நாளையும் மேலும் இரண்டு எரிபொருள் சரக்குகளை தாங்கிய கப்பல்கள் வரவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

7,000 மெற்றிக் தொன் ஒக்டேன் 95 பெற்றோல் மற்றும் 29,000 மெற்றிக் தொன் ஒக்டேன் 92 பெற்றோலை சுமந்து வரும் கப்பல் இன்று கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடும் என எதிர் பார்க்கப்படுவதாக இலங்கை பெற்றாலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மயூர நெத்தி குமாரகே குறிப்பிட்டார்.

சிங்கப்பூரிலிருந்து 28,000 மெற்றிக் தொன் டீசலை ஏற்றி வரும் மற்றொரு கப்பல் நாளை வியாழக்கிழமை அன்று வந்து சேரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# மாகாணசபைத் தேர்தல் நடந்தால் பெரமுன தனித்து ஆட்சியமைக்கும்

## நம்பிக்கை வெளியிட்டார் சாந்த பண்டார



(கொழும்பு)

நாட்டில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய 8 மாகாணங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்து ஆட்சியமைக்கும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் ஒவ்வொரு நாளும் ஆதரவு மிக வேகமாகப் பெருகி வருகின்றது. குறிப்பாக, நாட்டின் கிராமிய மட்டங்களில் பொது ஜன பெரமுனவுக்குப் பேராதரவு கிடைத்துள்ளது என்பதை எங்களால் களத்தில் நேரடியாகக் காண முடிகிறது. எனவே, எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள அச்சப்படும் நிலையில் எங்களது கட்சி இல்லை.

அதனால்தான், இழுபறியில் உள்ள மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு தற்போதைய அரசுக்கு மிகவும் துணிச்சலாகவும், பகிரங்கமாகவும் நாங்கள் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றோம்.

அரசியல் இலாபங்களுக்காகக் கட்சி தாவும் மக்கள் பிரதிநிதிகளின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பறிக்கக்கூடிய புதிய சட்ட மூலங்களுக்கு நாங்கள் ஒருபோதும் எதிரானவர்கள் அல்ல. சுயநல அரசியலைத் தடுக்கும் அத்தகைய சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் நாங்கள் நிச்சயமாக முழுமையாக ஆதரிப்போம்." எனத் தெரிவித்தார். (நி)

# சட்டவிரோத ட்ரோன் இறக்குமதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை



(கொழும்பு)

சட்டவிரோத ட்ரோன் இறக்குமதி மற்றும் அதன் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான விதிமுறைகளை கடுமையாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கமைய, அவற்றுக்கான கட்டாய உரிமம் மற்றும் பதிவு நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, சட்டவிரோத ட்ரோன் இறக்குமதி மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போதுள்ள விதிமுறைகளின் கீழ், வணிக ரீதியாகப் பயன்படுத்தப்படும் ட்ரோன்கள் மற்றும் குறிப்பிட்ட எடைக்கு அதிகமான ட்ரோன்கள் கண்டிப்பாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# வாட்ஸ் அப் டெலிகிராம் மோசடிகள்; பொது மக்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

போலி வாட்ஸ்அப் மற்றும் டெலிகிராம் கணக்குகள் மூலம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் போல் நடித்து பணம் பறிக்கும் மோசடி கும்பல்கள் அதிகரித்து வரும் ஒரு மோசடி குறித்து இலங்கை கணனி அவசர தயார் நிலைக் குழு பொது மக்களை எச்சரித்துள்ளது.

மோசடிக்காரர்கள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் புகைப்படங்கள் மற்றும் அடையாளங்களைப் பயன்படுத்தி போலி சுயவிவரங்களை உருவாக்கி, தொலைபேசி அழைப்புகள், வாட்ஸ்அப் செய்திகள் மற்றும் டெலிகிராம் உரையாடல்கள் மூலம் தனிநபர்களைத் தொடர்புகொள்வதாக கணனி அவசர தயார் நிலைக்குழு பொதுமக்களை எச்சரித்துள்ளது.

சமூக ஊடகத் தளங்கள், குறுஞ்செய்தி செயலிகள் அல்லது தனிப்பட்ட கணக்குகள் மூலம் இலங்கை பொலிஸார் பணம் கோருவதில்லை என்று அதிகாரிகள் வலியுறுத்தினர்.

இத்தகைய வழிகள் மூலம் பொலிஸ் அதிகாரி என்று கூறிக்கொள்ளும் எவருக்கும் பணம் அனுப்ப வேண்டாம் என்றும், சந்தேகத்திற்கிடமான தகவல் தொடர்புகளைச் சரிபார்க்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய மோசடிகளை எதிர்கொள்பவர்கள், அவற்றை உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (நி)

# நாமலை ஜனாதிபதியாக்கும் வரை ஓயப்போவதில்லை - சத்தாதிஸ்ஸ தேரர் சூளுரை



(கொழும்பு)

நாமல் ராஜபக்ஷவை அடுத்த தேர்தலில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக்கும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை என பௌத்த தேசியவாத அமைப்பான "ராவணா பலய" அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் சூளுரைத்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கிராமங்கள் தோறும் வேலைத்திட்டத்தின் கீழ், அநுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை தொகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு, அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் [illegible] கொண்டு உரையாற்றும் போதே சத்தாதிஸ்ஸ தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று அரசாங்கத்தில் இருப்பவர்கள் எங்களிடம் வந்து, அடுத்த தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்று கேட்கிறார்கள். நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராகச் செயற்படும் தரப்பினர், அவரிடமிருந்து விலகுமாறு எங்களுக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள்.

அவர்களுக்கு நாங்கள் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறோம் உங்களுக்கு இருப்பது போன்ற முதுகெலும்பில்லாத நிலை எங்களுக்கு இல்லை. நாமல் ராஜபக்ஷவை அடுத்த தேர்தலில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக்கும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை.

இந்த அரசாங்கம் விடுதலைப் புலிகள் ஆதரவு சக்திகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே செயற்படுகிறார்கள்.

சுரேஷ் சலேயை சிறை வைத்து, இந்த நாட்டுக்குச் சேவை செய்த அந்த அன்பான இராணுவ வீரரைத் தண்டித்து, சித்திரவதைக்கு உள்ளாக்கி வருகிறார்கள்.

சலேயை துன்புறுத்துவது ராஜபக்ஷக்களின் பெயரைச் சிதைப்பதற்காகவே என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ணம் – 2026

# விசாகரூபனின் அதிரடி ஆட்டத்தால் 2ஆவது சுற்றுக்கு தகுதிபெற்ற டிறைற்றேன் அணி

**33 வருட கால கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ணத் தொடருக்கான போட்டியில் டிறைற்றேன் அணியைச் சேர்ந்த விசாகரூபன் முதல்முறையாக 164 ஓட்டங்களைப் பெற்று தனிப்பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.**



கடந்த 30 ஆம் திகதி சனிக் கிழமை நடைபெற்ற கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ண தொடருக்கான 2ஆவது போட்டியில் டிறைற்றேன் அணியை எதிர்த்து அரியாலை சென்றல் அணி மோதியது.

இதில் டிறைற்றேன் அணி முத லில் துடுப்பெடுத்தாடிய போது 30 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 321 ஓட்டங்களைப் பெற்றது.

விசாகரூபன் - 164, அபிஷாந்- 26, உதயசாந் - 25, லினித் -30, அபிநயன் - 22, ஓட்டங்களை பெற்ற னர்.



பந்து வீச்சில் அரியாலை சென் றல் அணியைச் சார்ந்த என்.சதீஸ் 47 ஓட்டங்களைக்கொடுத்து 2 இலக்குகளையும் வி.தேனுயன் 59 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வி.ஈவன், எ.ஜெனன், பி.மதுரஸன் தலா 1 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் அணி 26.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற் றது. கிருபாகரன்-32, சரவணன்- 30, தேனுகன் - 26, ஜெனன் - 39, ஈவன்-22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் டிறைற்றேன் அணியை சார்ந்த வி.சாருபன் 24 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக் குகளையும், மணிவண்ணன் 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக் குகளையும், உதயசாந் 29 ஓட்டங் களைக் கொடுத்து 2 இலக்குகளை யும் கைப்பற்றினர்.

டிறைற்றேன் அணி, அரியாலை சென்றல் அணியை 122 ஓட்டங் களால் வெற்றி பெற்று தொடரில் 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (3)

---

### ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்

# 300 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி




ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இந்திய சுற்றுப் பயணத்தின் போது நடைபெற்ற ஒரேயொரு போட்டி கொண்ட டெஸ்ட் போட்டியில், இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 300 ஓட் டங்கள் என்ற பாரிய வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.


சண்டிகரின் நியூ சண்டிகர் மைதா னத்தில் கடந்த 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த போட்டியில், இந்திய அணி தனது முதலா வது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 564 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து தனது முதலா வது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆப் கானிஸ்தான் அணி, இந்திய அணியின் பலம் வாய்ந்த பந்துவீச்சுக்கு முகங் கொடுக்க முடியாமல் திணறி 152 ஓட்டங் களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. முதலாவது இன்னிங்ஸில் 412 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த தால் பலோ-ஒன் (Follow-on) முறை க்கு உள்ளாகி, தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த ஆப்கானிஸ் தான் அணி, வெறும் 112 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறி கொடுத்தது.

இதன் படி, ஆப்கானிஸ்தான் அணியை இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 264 ஓட்டங்களுக்குள் சுருட்டிய இந்திய அணி, இன்னிங்ஸ் மற்றும் 300 ஓட்டங்களால் வரலாற்று வெற்றியைப் பதிவு செய்து டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியுள்ளது. (3)

---

# முத்தரப்பு ஒருநாள் தொடரில் வியாஸ்காந் இடம்பிடிப்பு




இந்தியா "ஏ" அணி, மற்றும் இலங்கை "ஏ" அணிகளுக்கு இடையே ரங்கிரி தம்புள்ள சர்வ தேச மைதானத்தில் இடம்பெறும் சர்வதேச ஒருநாள் தொடரின் நேற் றைய போட்டியில் தமிழ் வீரர்க ளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் திறமை களை வெளிப் படுத்தி வருகின்ற தமிழ் பேசுகின்ற சுழல்பந்து வீச்சாளரான விஜயகாந்த் வியாஸ் காந்த் முதன்முறையாக இடம்பிடித் துள்ளனர்.

2026 முத்தரப்புத் தொடரில் இந் தியா "ஏ" அணி, இலங்கை "ஏ" மற்றும் ஆப்கானிஸ்தான் "ஏ" அணிகள் பங்கு பற்றுகின்றன. 2026-2027 போட்டிப் பருவகாலத் திற்காக இலங்கை தேசிய கிரிக்கெட் வீரர்கள் 46 பேரை தேசிய விளை யாட்டு வீரர் ஒப்பந்தங்களுக்காக தேர்ந்தெடுத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அண்மையில் அறி வித்தது.

இதில் முதல் தடவையாக அண் மைக் காலமாக உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் திறமைகளை வெளிப் படுத்தி வருகின்ற தமிழ் பேசுகின்ற சுழல்பந்து வீச்சாளரான விஜயகாந்த் வியாஸ்காந்த் முதன்முறையாக இடம்பிடித்துள் ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## J/CHAVAKACHCHERI HINDU COLLEGE (CHC)
## INVITATION FOR BIDS

**CONSTRUCTION OF PROPOSED 30 CLASSROOM BUILDING - PHASE 1 (G+2)**

1. **The Chairman of Project Procurement Committee (PPC)** on behalf of the **Old Students' Association (OSA), CHC** now invites sealed bids from eligible and qualified bidders for **"Construction of Proposed 30 Classroom Building - Phase 1 (G+2)"** as described below and estimated to cost without VAT **Rs. 70.5 million.** The Contract period is **180 Days.**

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade C5 or above with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
"The bidders shall also register themselves with Registrar of Public Contracts, Sri Lanka, in term of the Public Contracts Act No. 03 of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid. The procurement shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate".

3. Interested bidders may obtain further information from the **President, Old Students' Association, Chavakachcheri Hindu College** and inspect the Bidding Documents at the same address on any working day **from 12.06.2026, between 9:00 -13:00 hrs.** Contact number is - 0779727730, Email – pmuchcosa@ gmail.com

4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application in the bidder's company letterhead, addressed to the **President, Old Students' Association, Chavakachcheri Hindu College** from **12-06-2026** Until **01-07-2026** from 9:00hrs to 13:00 hrs upon payment of a non-refundable fee of Rupees **Seventeen thousand Five Hundred (Rs. 17500.00).**

5. Bids shall be delivered or sent by registered post to the **Chairman of Project Procurement Committee , Chavakachcheri Hindu College, Chavakachcheri** to reach on or before **14:00 hrs** on **02-07-2026.** Bids will be opened soon after closing at the same address presence of the bidders' representatives who choose to attend.

6. The Pre-Bid Meeting will be held on **18.06.2026** at the address specified in Paragraph 5 above, commencing at **14:00 hrs.**

7. Bids shall be valid until 30-09-2026 and **Bid Security shall be valid until 28.10.2026.** Bid must be accompanied by an "on demand" and "unconditional" Bid Guarantee, drawn in favour of President, Old Students' Association, **Chavakachcheri Hindu College** for a sum of Rupees **One Million (Rs 1, 000, 000.00)**

**Chairman,**
**Project Procurement Committee,**
**Old Students' Association,**
**Chavakachcheri Hindu College,**
**A9 Road,**
**Chavakachcheri.**

(C-5805)

## நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உபஅலுவலக ஆதனப்பெயர்மாற்றம் வரியிறுப்பாளரின் பெயரை ஆதனப்பதிவேட்டில் உட்புகுத்தல்

நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 16, வைத்திலிங்கம் வித்தியாலய வீதி, ஆதன இல 45/11 எனும் ஆதனமானது E.கந்தையா / கார்த்தி உ/கோ சிங்கராசா பரமேஸ்வரி எனவும் தற்போதைய உரிமையாளர் தம்பிப்பிள்ளை சின்னத்துரையும் பெண் சரஸ்வதியும் என்ற விபரத்தில் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்தை தம்பிப்பிள்ளை சின்னத்துரையும் பெண் சரஸ்வதியும் என தங்களது பெயரை ஆதனப்பதிவேட்டில் வரியிறுப்பாளர்களாக பதிவு மேற்கொள்ள விண்ணப்பித்துள்ளார்.

1. விண்ணப்பதாரி பிரசித்த நொத்தாரிசு திரு J.S.A. மதுரநாயகம் L.L.B (Col), M.A அவர்கள் முகதாவில் 3992 ஆம் இலக்க 15.01.2017 ஆம் திகதிய அறுதி உறுதியின்படியும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களினால் 652 ஆம் இலக்க 27.04.2005 ஆம் திகதி அளந்து வரைந்த படத்தின்படி 2ம் துண்டான நிலப்பரப்பு 01 குளி 09.00 ஆகும்.

2. விண்ணப்பதாரியின் உறுதியின் ஆதன அட்டவணைப்படியும் நில அளவைப் படத்தின் படியும் எல்லைகள் **கிழக்கு** - தம்பிப்பிள்ளை சின்னத்துரையின் ஆதனம், **வடக்கு** - குறித்த படத்தில் காட்டிய 1ஆம் இலக்கத் துண்டான 1.83 மீற்றர் அகலம் கொண்ட பாதையும், சிங்கராசா பெண் பரமேஸ்வரியின் ஆதனமும், **மேற்கு** - கதிரவேலு திருநாவுக்கரசுக்கும், தம்பிப்பிள்ளை சின்னத்துரைக்குமுரிய ஆதனங்கள், **தெற்கு** -சண்முகம் அன்னலிங்கத்துக்கும் சின்னத்தம்பி சின்னராசாவுக்குமுரிய ஆதனங்கள்,
இதடங்கலும் குறித்த படத்தில் சுட்டிய 1ஆம் இலக்கத் துண்டான பாதையால் அதன் வடக்கேயுள்ள கல்திட்டி ஒழுங்கையில் இருந்து இக்காணிக்குப் போக்குவரத்து செய்யும் உரித்தும் குறித்த படத்தில் சுட்டிய 1ஆம் இலக்கத் துண்டில் இதற்குரிய பங்கும் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

3. விண்ணப்பதாரியினால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் ஆரம்ப உறுதியானது பிரசித்த நொத்தாரிசு திரு.K.கேசவன் அவர்கள் முகதாவில் 8501ஆம் இலக்கத்தில் 2005.05.01ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட உறுதியானது நன்கொடை என குறிக்கப்பட்டாலும் தாய் உறுதி இல்லாமல் வரையப்பட்டமையால் வெளிப்படுத்தல் சாதனமாகவே கருத முடியும்.

4. குறித்த விபரங்களடங்கிய ஆதனத்தை ஆதனப்பதிவேட்டில் வரியறுப்பாளராக பதிவு மேற்கொள்வதற்கு நல்லூர் பிரதேச சபைக்கு வெளிப்படைத்தன்மை அவசியமாகும் .இதன்பிரகாரமும் சட்ட ஆலோசகரின் பரிந்துரையின் பிரகாரமும் குறித்த ஆதனத்தை ஆதனப்பதிவேட்டில் தம்பிப்பிள்ளை சின்னத்துரை பெண் சரஸ்வதி என்பவர்களை வரியறுப்பாளர்களாக பதிவு மேற்கொள்ளும் பொருட்டு பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.

5. இவ்வாதனம் வெளிப்படுத்தல் சாதனமாக காணப்படுவதாலும் குறித்த செயற்பாடுகளானவை சட்டபூர்வமான வெளிப்படைத்தன்மை கொண்டதும் பொறுப்பு வாய்ந்த செயற்படாக காணப்படுவதாலும் ஆதனபெயர்மாற்று விண்ணப்பதாரரின் கோரிக்கைக்கமைவாகவும் இவ்வாதனம் தொடர்பான விபரங்கள் யாழ் குடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.

குறித்த ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள், சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாயிருந்தால் இங்குள்ள உறவினர் மூலமாகவோ ஆட்சேபனைகளை தெரிவிக்குமாறும், யாரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் தம்பிப்பிள்ளை சின்னத்துரையும் பெண் சரஸ்வதியும் என்பவர்களின் பெயருக்கு ஆதனபெயர்மாற்றம் செய்வதனால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம். (சட்டபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேசசபைக்கு உண்டு. என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்).

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**

(C-5807)



## சுழிபுரம்- பறாளாய்
# ஈசுர விநாயகர் கொடியேற்றத் திருவிழா

**காலம் :- 11.06.2026 நாளை வியாழக்கிழமை**

**நேரம் :- மு.ப 10.30 மணியளவில்**

**மஹோற்சவகுரு**

"வித்தியாசாகரம்" சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் அவர்கள்
(ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேசத் திருக்கோவில், சண்டிலிப்பாய்)

[7819]

**சோழியபுரான் பிறைசூடிக்குரு, ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# வல்லிபல் பினான்ஸின் புதிய கிளைகள் திறப்பு



(யாழ்ப்பாணம்)

வல்லிபல் பினான்ஸ் நிறுவனத்தின் 91, 92 மற்றும் 93 ஆவது கிளைகள் முறையே நெல்லியடி, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சிறந்த நிதி நிறுவனமாக விளங்கும் வல்லிபல் பினான்ஸ் நிறுவனமானது கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு விளங்குவதுடன் வடக்கில் தமது புதிய கிளைகளை ஆரம்பித்து புதிய மைல் கல்லை எட்டியுள்ளது.

இந் நிகழ்வில் வல்லிபல் பினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஜெயந்த ரெங்கமுவ கலந்து கொண்டு புதிய கிளைகளைத் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (க-8-60-299)



# சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய 3 உணவகங்களுக்கு சட்டநடவடிக்கை

(மன்னார்)

மன்னார் நகர் பகுதியில் பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதிக்கும் வகையில், சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வந்த மூன்று பிரபல உணவகங்கள் மீது மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கபெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்து குறித்த உணவகங்களில் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வின் போது, குறித்த உணவகங்கள் கடுமையான சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வந்தது கண்டறியப்பட்டது.

இந்தக் கடுமையான சுகாதார மீறல்கள் காரணமாக, குறித்த மூன்று உணவகங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறாதவாறு கடுமையான எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டன. (8-285)

# செல்லப்பா சுவாமி குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நாளை வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9மணிக்கு அபிஷேகம், திருமுறை நற்சிந்தனைப் பாடல்கள் இடம்பெறும்.

தொடர்ந்து, முற்பகல் 11.00 மணிக்கு, "செல்வக்குருநாதன்" எனும் தலைப்பில்ஓய்வுநிலை அதிபர் நா.சிவசிதம்பரம் உரையாற்றவுள்ளார். (8)



சாவகச்சேரி பிரதேசசபையின் மகளிர் தினமும்- மகளிர் ஊக்குவிப்பும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் சபையின் தவிசாளர் பொன்னையா குகதாசன் தலைமையில் இடம்பெற்றது.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாதாந்த இலவச மருத்துவ முகாம் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் நிர்வாக சபைத் தலைவர்களாகப் பணிபுரிந்து அமரத்துவமடைந்த கல்வி அதிகாரி சே. தியாகராஜா மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் தே.து.ஜெயரத்தினம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக, பொது மக்கள் நலன் கருதி நடாத்தப்படும் மாதாந்த இலவச மருத்துவ முகாம் கடந்த 30.05.2026 அன்று துர்க்காதேவி தேவஸ்தான யாத்திரிகர் விடுதியில் ஆரம்ப மானது.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற உயரிய நோக்கோடு, துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இம்மருத்துவ முகாமில் தெல்லிப்பழை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு தமக்கான இலவச மருத்துவச் சேவைகளைப் பெற்றுப் பயனடைந்தனர். தொடர்ந்து வரும் மாதங்களிலும் தொடர்ச்சியாக இந்த மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. (8)



# மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி



(தருமபுரம்)

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி கண்டாவளை கோணங்குளம் கற்பக பிள்ளையார் சவாரித் திடலில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் 70 இற்கும் மேற்பட்ட காளைகள் பங்குபற்றின.

இதன்போது போட்டியில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்ட வட்டக்கச்சியைச் சேர்ந்த காளை உரிமையாளருக்கு புதிதாக செய்யப்பட்ட மாட்டுவண்டி ஒன்று பரிசாக வழங்கப்பட்டது.

அத்துடன் போட்டியில் பங்குபற்றிய ஏனையவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட்டன. (8-316)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செல்லும் யாத்திரிகர்களுக்கு கொக்குத் தொடுவாய் முருகன் ஆலயத்தில் வைத்து, உலர் உணவுப் பொருட்கள் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. இவ் உதவிகளை ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார். (8-60)

# சிறப்புமலர் வெளியீடு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய திருமஞ்ச சிறப்பு மலர் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை நண் பகல் 12.30மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பரி பாலன சபைத் தலைவர் சி.சுந்தரமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8-30)



யாழ்ப்பாணம் வடமராட்சி கற்கோவளம் பகுதியில் தமிழ் மக்கள் கூட்டணியினரால் சந்திரசேகரம் பிரசாந்தின் நிதியுதவியில் மீனவர்களுக்கான உயிர்காக்கும் அங்கிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு - மேற்கு 4 ஆம் வட்டாரம், பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் மகோற்சவப் பெருந்திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை வேட்டைத்திருவிழாவும் இரவு சப்பறத் திருவிழாவும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அம்பாள் தீர்த்தக் குளத்தில் தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் இரவு கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளாதார படுகொலையாளிகளே பொருளாதாரம் பற்றி பேசுகிறார்கள்

## சுட்டிக்காட்டிய அமைச்சர் விமல்



(கொழும்பு)

உயர்நீதிமன்றத்தால் பொருளாதார படுகொலையாளிகள் என ஏகமனதாக தீர்ப்பளிக்கப்பட்ட ராஜபக்ஷக்கள் தான் இன்று பொருளாதாரம் பற்றி பேசுகிறார்கள் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்கள், ஊழல்வாதிகள் இன்று ஒன்றிணைந்து கூடாரமிட்டுள்ளார்கள். இவர்களின் அச்சுறுத்தலுக்கு அரசாங்கம் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை.

ஊழல்வாதிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஊழல்வாதிகளையும், அவர்களின் கருத்துக்களையும் ஒருபோதும் பொருட்படுத்தப் போவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# நெற்செய்கை நடவடிக்கைகளில் ட்ரோன் தொழில்நுட்பம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள உலர் வலயத்தில் எதிர்வரும் பெரும்போக நெற்செய்கை நடவடிக்கைகளுக்காக ட்ரோன் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் நெல் விதைப்பு மற்றும் உரம் தெளிப்பு போன்ற முக்கிய விவசாயப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேனவின் தலைமையில், குருகுலவ பகுதியில் ட்ரோன் தொழில் நுட்பம் தொடர்பான விசேட செயலமர்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

இதன்போது, முற்றிலும் உள்நாட்டு கட்டுப்பாட்டு மென்பொருள் மற்றும் அமைப்புகளைக் கொண்டு, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விவசாய ட்ரோன் காட்சிப்படுத்தப்பட்டது. (நி)


## சேவை நலன் பாராட்டு



அரச சேவையில் 26 வருடங்கள்
உள்ளூராட்சி உதவியாளராக
அரும்பணியாற்றி
2026.06.10 இன்று ஓய்வு
பெற்றுச் செல்லும்
**திரு.கதிரவேலு கருணாகரன்**
அவர்களின்
சேவையினைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
மேலும் அவரது
ஓய்வுகாலம்
மகிழ்ச்சிகரமாக அமைய
எல்லாம் வல்ல
இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்: ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(C-5804)

## சேவை நலன் பாராட்டு



திரு. திருப்பதி சுபாகரன்
(B.A, BIT,Dip.in.edu)

### சேவை விபரம்

- யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை
  02.12.1996- 31.12.2008
- யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை
  01.01.2009- 02.01.2011
- கிளி/சென்.திரேசா மகளிர் கல்லூரி
  03.01.2011 - 01.01.2013
- யா/சிதம்பரக் கல்லூரி
  02.01.2013 - 03.02.2016
- யா/ஹாட்லிக் கல்லூரி
  04.02.2016-10.06.2026

Congratulations

யா/ஹாட்லிக் கல்லூரியில், ஆசிரியராக பணியாற்றி 10.06.2026 இன்று ஓய்வு பெறும் திரு.திருப்பதி சுபாகரன் அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு அவரது ஓய்வு காலத்தில் உடல் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் பணியாளர் நலன்புரிச் சங்கம்
யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

(2402)


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 01, காரைக்காட்டு 2 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள 45 எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தை கொண்ட ஆதனம் S.சந்திரலிங்கம் பெண் நாகநந்தினி என ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை நாகலிங்கம் ஆனந்தராஜா என்பவர் பிரசித்த நொத்தாரிசு சு.பாலசுப்பிரமணியம் முகதாவில் 15.11.1983 ஆம் திகதி 1499 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் S.சந்திரலிங்கமும் பெண் C.நாகநந்தினிக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் கொக்குவில், கொக்குவில் மேற்கு,சொர்ண வடலி ஒழுங்கை "செல்வ வாசா" எனும் இடத்தை சேர்ந்தவர்களான செல்வநாயகம் சந்திரலிங்கமும் பெண் நாகநந்தினி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சு.வ.கணேசன் முகதாவில் 9.12.2012 ஆம் திகதி 2811 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் குகராசா வாஹீஸ்வரன் பெண் தர்சனாவுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல- 14,சொர்ணவடலி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திரலிங்கம் கைம்பெண் நாகநந்தினியும் அதே முகவரியைச் சேர்ந்த குகராசா வாஹீஸ்வரனும் பெண் தர்சனா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் கலாதீபன் முகதாவில் 20.09.2025 ஆம் திகதி 801 இலக்க பிரகடனத்தல் உறுதியில் 1974.04.06 ஆம் திகதி 167 இலக்கத்தில் நொத்தாரிசு T. பூபாலன் முகதாவில் 1 ஆம் பேரிலும் அவரது இரண்டு சகோதரர்கள் பேரிலும் முடிந்த பிரிவிடல் உறுதிப்படி நிலப்பரப்பு - 04. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் P.S ஐயர் அவர்களால் 1983.06.06 ஆம் திகதி 1389 ஆம் இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்ட படத்தில் 1-4 துண்டுகளுக்கு கூடிய நிலப்பரப்பு 3குளி 16.29, இதில் 1 ஆம், 2 ஆம் துண்டுகளுக்கு கூடிய நிலப்பரப்பு 2 குளி 7.86. இது 1 ஆம் பேரின் இரண்டு சகோதரர்களின் 2/3 பங்கு எனக் குறிப்பிட்டு 1983.11.15 ஆம் திகதி 1499 ஆம் இலக்கத்தில் நொத்தாரிசு இ.பாலசுப்பிரமணியம் முகதாவில் 1 ஆம் பேருக்கு முடிந்த சீதன உறுதிப்படி 1 ஆம் பேரின் சொந்தமும் தடையற்ற நிந்தமான ஆட்சியுமாகும். ஆனால் குறித்த 1499 ஆம் இலக்க சீதன உறுதியில் (திருத்தவேண்டிய அட்டவணை) நிலப்பரப்பு 2 குளி 7.86 இதில் 2/3 என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே குறித்த தவறை நிவர்த்தி செய்ய வேண்டி இருப்பதால் மேற்படி ஆதனத்தை நிந்தமாக்கி வெளிப்படுத்தியுள்ளார்.

### ஆதன அட்டவணை
### திருத்த வேண்டிய அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர் பிரதேச செயலர் பிரிவு J/98 வண்ணார்பண்ணை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவு, வண்ணார்பண்ணை வடமேற்கு இறை "பிரப்பங்குளி" நிலப்பரப்பு 2 குளி 7.86 ஆம் வீடும் கிணறும் வான்பயிர்களும் மற்றும் மிதைச் சேர்ந்தவைகளும். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் பீ. எஸ். ஐயர் அவர்களால் அளந்து வரைந்த 06.06.1983 ஆம் திகதிய 1389 ஆம் இலக்கப்படத்தில் 1 ஆம்,2 ஆம் துண்டுகளாக சுட்டப்பட்டுள்ளது,

இதற்கு எல்லை
**கிழக்கு** - சபாரத்தினம் பஞ்சரத்தினத்தின் ஆதனம்
**வடக்கு** - பூநாறி ஒழுங்கை
**மேற்கு** - ஒழுங்கை
**தெற்கு** - குறித்த வரைபடத்தில் துண்டு 3.இதனடங்களில் சொரியலாய் 2/3 பங்கு

### திருத்திய அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர் பிரதேச செயலர் பிரிவு J/98 வண்ணார்பண்ணை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவு , வண்ணார்பண்ணை வடமேற்கு இறை "பிரப்பங்குளி" நிலப்பரப்பு 4 இது உத்தரவுப்பெற்ற நிலஅளவையாளர் P.S.ஐயர் அவர்களால் அளந்து வரைந்த 06.06.1983 ஆம் திகதிய 1389 ஆம் இலக்கப்படத்தில் 1-4 வரையான துண்டுகளுக்கு கூடிய நிலப்பரப்பு 03குளி 16.29. இதில் 2/3 பங்குக்கு,

குறித்த 1389 ஆம் இலக்கப்படத்தில் 1 ஆம்,2 ஆம் துண்டுகளுக்கு கூடிய நிந்தமான நிலப்பரப்பு 02 குளி 7.86. இது மீண்டும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T.தங்கராஜா அவர்களால் 2025.03.22 ஆம் திகதி 14389 ஆம் இலக்கத்தில் அளந்து விந்தாரித்த படத்தின்படி துண்டு 1 இற்கு கூடிய நிலப்பரப்பு 02(இரண்டு) குளி 5.61 (ஐந்து தசம் ஆறு ஒன்று)

இதற்கு எல்லை
கிழக்கு - சுப்பிரமணியம் ஜீவபாலனுக்குரிய ஆதனமும் 10' அகலமான பாதை நிலமும்
வடக்கு - பூநாறி ஒழுங்கை
மேற்கு - 12' அகலமான ஒழுங்கை
தெற்கு விமலராஜா பெண் இரதனிக்குரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட வீடும் கிணறும் வான்பயிர்களும் மற்றும் இதைச் சேர்ந்தவைகள் அனைத்தும்

தற்போது இவ்வாதனத்தை குகராசா வாஹீஸ்வரன் பெண் தர்சனா என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குகராசா வாஹீஸ்வரன் பெண் தர்சனா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர், யாழ் மாநகரசபை (C-5803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

### இஸ்ரேல்— ஈரான் சமரசம்

## இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதாக அறிவிப்பு



(டெஹ்ரான்)

ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதாக இஸ்ரேல் அறிவித்துள்ள நிலையில் இஸ்ரேலுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வந்த இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதாக ஈரானும் அறிவித்துள்ளது.

எனினும், தெற்கு லெபனான் உள்ளிட்ட பகுதிகளில் மேலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டால், முன்னெப்போதையும் விட கடுமையான பதிலடி வழங்கப்படும் என ஈரான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய கிழக்கில் நீடித்து வரும் பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளதுடன், பிராந்தியத்தில் அமைதியை நிலைநிறுத்தும் முயற்சிகளுக்கு இது முக்கிய முன்னேற்றமாகவும் பார்க்கப்படுகிறது.

அதேவேளை, இஸ்ரேல் மற்றும் அதன் நட்பு நாடுகளின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச நாடுகள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. (3)

## 1 கிலோ வெண்டிக்காய் 7 ஆயிரத்து 200 ரூபாயா...!





(வோஷிங்டன்)

இந்தியாவில் மலிவாகக் கிடைக்கும் வெண்டிக்காய், அமெரிக்காவில் பணக்காரர்கள் மட்டும் சாப்பிடும் சிற்றுண்டி உணவாக மாறிவிட்டதாக அதிர்ச்சியோடு இந்தியர் ஒருவர் வெளியிட்ட காணொளி, இணையத்தில் வைரலாகி வருகிறது.


அமெரிக்காவிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில், வெறும் 85 கிராம் வறுத்த வெண்டிக்காய் 600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் அந்தக் காணொளியில் குறிப்பிட்டுள்ளார்.

இதன் கணக்கின்படி, ஒரு கிலோ வெண்டைக் காயின் விலை 7 ஆயிரத்து 200 ரூபாயாக உயர்கிறது.

இந்தக் காணொளியைப் பார்த்த சமூக வலைத்தள வாசகர்கள், "பேசாமல் அமெரிக்காவுக்கு வெண்டிக் காயை ஏற்றுமதி செய்யும் வியாபாரத்தை ஆரம்பித்திடலாமா" எனப் பல்வேறு கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர். (3)

# பிலிப்பைன்ஸில் பயங்க

- 35 பேர் உயிரிழப்பு
- 200 இற்கும் மேற்பட்டோ
- ஆயிரத்திற்கும் மேற்பட்ட



**(மணிலா)——
பிலிப்பைன்ஸி
நில நடுக்கத்தி
ரிழந்த துடன் 2
டோர் படுகாய**

சரங்கானி கடற்பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பதிவானபின் அதிர்வுகளின் எண்ணிக்கை, உள்ளூர் நேரப்படி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 1,100 ஆக உயர்ந்துள்ளதாக பிலிப்பைன்ஸின் நில அதிர்வு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நிலநடுக்கவியல் நிறுவனம், நிலநடுக்கத்தின் மையப் பகுதிக்கு அருகில் தொடர்ச்சியான நில அதிர்வுகள் இருப்பதைக் காட்டும் வகையில், பின் அதிர்வுகள் 1.3 முதல் 6.7 ரிக்டர் அளவு வரை இருந்ததாகத் தெரிவித்துள்ளது.

313 நில அதிர்வுகள் வரைபடமாக்கப்பட்டன. மேலும் அப்பகுதியில் வசித்த மக்களால் 23 அதிர்வுகள் உணரப்பட்டன.

சரங்கானியில் உள்ள மாசிம் கடற்கரைக்கு அப்பால், உள்ளூர் நேரப்படி திங்கட்கிழமை காலை 7.37 மணிக்கு 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது சுனாமி அலைகளைத் தூண்டி, மின்டானோவின் சில பகுதிகளில் உட்கட்டமைப்பு, மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு வசதிகளுக்கு சேதத்தை ஏற்படுத்தியது.

அவசர நிவாரணப் பணிகள் தொடர்வதால், உயிரிழப்புகளின்



எண்ண
கரிக்க
நம்புகி
பேர
றுப்படி

# அடுத்த இரண்டு வா

## ஈரானுக்கு எதிராக முழுமை

(வோஷிங்டன்)

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஈரான் மீதான முழுமையான வெற்றியை அமெரிக்கா அறிவிக்கும் என்று டொனால்ட் ட்ரம்ப் கூறுகிறார்.

"நாங்கள் இப்போது பேச்சுவார்த்தையில் இருக்கிறோம், அவர்கள் ஒரு நல்ல ஒப்பந்தம் செய்யத் தயாராக உள்ளனர், அவர்கள் எங்களுக்கு எல்லாவற்றையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். மேலும் தங்களுக்கு அணு ஆயுதங்கள் வேண்டாம்



என்று
இருக்
கூறின
மே
போரில்
வருகி
க்கிறே
இரண
முழுமை
விக்கு
நீ
வெற்
முழுமை
இருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

## நேர்காணலில் இருந்து பாதியில் வெளியேறியதால் பரபரப்பு

### தொடர் கேள்விகளால் கொந்தளித்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

நேர்காணல் இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திடீரென வெளியேறிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கத் தொலைக்காட்சி நிறுவனமான என்பிசி நியூஸ் நெறியாளர் கிறிஸ்டன் வெல்கர், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை நேர்காணல் செய்தார்.

இதன்போது பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் கேள்வியெழுபப்பட்டபோது, ஈரான் - அமெரிக்கா பேச்சுவார்த்தை, முந்தைய ஆட்சியாளர்களின் திட்டங்கள், ட்ரம்ப் நிர்வாகத்தின் நிதி மற்றும் கலிபோர்னியா தேர்தல் முறைகேடு போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

அத்துடன் கலிபோர்னியா தேர்தலில் முறைகேடு நடப்பதாக ட்ரம்ப் கூறிய குற்றச்சாட்டை நெறியாளர் கிறிஸ்டன் வெல்கர் நிராகரித்தார். மேலும் நிதி குறித்துப் பேசும்போது, ஜோ பைடனின் மோசமான ஆட்சிதான் காரணம் என குற்றம் சுமத்தினார். இதற்கு சரியான ஆதாரம் இல்லை என நெறியாளர் கூறிய நிலையில் ஆதாரம் இருப்பதாக ட்ரம்ப் வாதிட்டுள்ளார்.

இதனையடுத்து நெறியாளருக்கும் ஜனாதிபதி ட்ரம்ப்பிற்கும் இடையே கடுமையான விவாதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ஊடகங்கள் சார்பு நிலையுடன் செயற்படுவதாக ட்ரம்ப் குற்றம் சுமத்தி, நேர்மையற்ற ஊடகங்களைக் கொண்ட நாடு சிறந்த நாடாக இருக்க முடியாது எனக்கூறி நேர்காணலை பாதியிலேயே நிறுத்தி வெளியேறினார்.

ஜனாதிபதி ட்ரம்ப் நேர்காணலில் இருந்து பாதியில் வெளியேறிய சம்பவம் தற் போது சர்வதேச அளவில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது. (3)

## ...ங்கர நிலநடுக்கம்

## ...டோர் படுகாயம்

## ...பட்ட அதிர்வுகள்

...ா)

...பன்ஸில் ஏற்பட்ட பாரிய ...கத்தினால் 35 பேர் உயி...டன் 200 இற்கும் மேற்பட்...கோயமடைந்துள்ளனர்.

...ாசிம் ...ளுர் ...ாலை ... அள ...து. ...ளைத் ... சில ...மின் ...டர்பு ...படுத் ... ...ரிகள் ...ளின்



எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கக்கூடும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.

பேரிடர் அதிகாரிகளின் கூற்றுப்படி, திங்கட்கிழமை இரவு நிலவரப்படி, குறைந்தது 35 பேர் உயிரிழந்ததாகவும், 200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## செங்கடலில் இஸ்ரேலுக்கு 'செக்' வைத்த ஹவுதி

(ஜெருசலேம்)

செங்கடலில் இஸ்ரேலின் கடல் போக்குவரத்துக்கு தடைவிதித்துள்ளதுடன், இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்போவதாக ஈரான் ஆதரவுபெற்ற ஏமனின் ஹவுதி அமைப்பு தெரிவித்துள்ளது. செங்கடலின் முக்கிய நுழை வாயிலான பாப் எல்-மந்தாப் நீரிணையை இஸ்ரேலிய கப்பல் போக்குவரத்திற்கு மூடுவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

"செங்கடலில் இஸ்ரேலிய கடல்வழிப் போக்குவரத்திற்கு முழுமையான மற்றும் மொத்தத் தடையை நாங்கள் அறிவிக்கிறோம்" என ஹவுதிகளின் ஆயுதப் படைகள் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கை வெளியிடப்பட்ட தருணத்திலிருந்து, செங்கடல் பகுதியில் இஸ்ரேல் நாட்டின் கப்பல்கள் அல்லது இஸ்ரேலுடன் தொடர்புடைய வணிகக் கப்பல்களின் இயக்கங்கள் அனைத்தும் தங்களுடைய இராணுவ இலக்குகளாகக் கருதப்படும் என்றும் ஹவுதி அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹவுதி அமைப்பின் இந்த தடையால் இஸ்ரேலின் சரக்கு கப்பல்கள் தெற்கு ஆபிரிக்காவின் முனையைச் சுற்றி நீண்ட தூரம் மாற்றுப் பாதையில் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.



ஏற்கனவே ஈரான் அரசால் ஹார்மூஸ் நீரிணை மூடப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்பு இஸ்ரேலின் முக்கிய இலக்குகளை குறிவைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகவும் ஹவுதி அமைப்பு தெரிவித்துள்ளது.

அதேசமயம், இந்த தாக்குதலை தங்கள் பாதுகாப்பு அமைப்புகள் வெற்றிகரமாக இடைமறித்ததாக இஸ்ரேலும் அறிவித்துள்ளது. காசா, லெபனான் மற்றும் ஈரான் மீது இஸ்ரேல் நடத்தி வரும் இராணுவத் தாக்குதல்களுக்குப் பதிலடியாகவே, தாங்கள் இந்தத் தடையையும், ஏவுகணைத் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளதாக ஹவுதி அமைப்பு அறிவித்துள்ளது. (3)

## ...வாரங்களில் ...ழுமையான வெற்றி



...ருக்கு ...டாம்

என்று சொல்லவும் தயாராக இருக் கிறார்கள்," என்று ட்ரம்ப் கூறினார்.

மேலும் அவர், "அந்தப் போரில் நாம் வெற்றி பெற்று வருகிறோம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் அடுத்த இரண்டு வாரங்களில் நாம் முழுமையான வெற்றியை அறிவிக்கும்போது,

நீங்கள் உண்மையாகவே வெற்றி பெறுவீர்கள். அது ஒரு முழுமையான வெற்றியாக இருக்கும், அது மிக விரைவாக நடக்கும்.

அப்போது எண்ணெய் விலைகளும் வேகமாக வீழ்ச்சியடையும்," என்றும் கூறினார்.

இருப்பினும், இரண்டு வாரங்களுக்குள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாக ட்ரம்ப் உறுதியளிப்பது இது முதல் முறையல்ல என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலகம்

# ஆதனபெயர் மாற்றம்

ஆதன இல 145, இருபாலை வீதி, வட்டாரம் 12, இவ்வாதனம் நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உபஅலுவலக ஆதனபதிவேட்டில் இராசையா சிவனேசன் பெண் பவளம் என்ற பெயரில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை சண்முகம் நடராசா பெண் சுதாஜினி என்பவர் தனது பெயருக்கு ஆதன பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

1. பிரசித்த நொத்தாரிசு செல்வி.ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் 6008 ஆம் இலக்கத்தில் 19.09.2011 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதியின்படி குளி 3.3 அளவு கொண்ட ஆதனத்தை வெளிப்படுத்தி ஆதனபெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் மு.இராசையா அவர்களினால் 73 ஆம் இலக்கத்தில் 20.01.2002 ஆம் திகதி அளந்து வரைந்த படத்தின்படி **கிழக்கு-** சிவனேசன் பெண் பவளத்தின் ஆதனமும் கிணறும், **வடக்கு-** சிவனேசன் பெண் பவளத்தின் ஆதனமும் கிணறும், **மேற்கு-** 6 அடி அகல ஒழுங்கை, **தெற்கு-** வாய்க்காலும் இருபாலை வீதியும் இதனடங்கலும் இதற்கு சேர்ந்தவைகளுமாகும்.

2. இவ்வாதனம் வெளிப்படுத்தல் சாதனமாக காணப்படுவதாலும் ஆதனத்தின் கிழக்கு பக்க உரிமையாளரான சிவனேசன் பெண் பவளத்தின் பெயரில் காணப்படுவதாலும், குறித்த செயல்பாடு களானவை சட்டபூர்வமான வெளிப்படைத்தன்மைகொண்டதும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடாக காணப்படுவதாலும் ஆதன பெயர்மாற்றுவிண்ணப்பதாரரின் கோரிக்கைக்கமைவாகவும் இவ்வாதனம் தொடர்பான விபரங்கள் யாழ் குடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.

3. எனவே மேற்படி விபரங்களை வெளிப்படுத்தி இவ் உறுதி காணப்படுவதனால் இவ்வாதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்ட பூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்ப வர்களாயிருந்தால் இங்குள்ள உறவினர் மூலமாகவோ ஆட் சேபனைகளை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் சண்முகம் நடராசா பெண் சுதாஜினி என்பவரின் பெயருக்கு ஆதனபெயர்மாற்றம் செய்வதனால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம். சட்டபூர்வமற்ற ஆவணங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேச சபைக்கு உண்டு. என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தலைவர்,
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

(C-5806)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 200 | 450 | 450 | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 210 | 180 | -- | 200 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 400 | 600 | 450 | 450 |
| தக்காளி | 800 | 700 | 800 | 800 | 700 | 750 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 140 | 200 | 200 | 140 |
| கோவா | 250 | 250 | 350 | 260 | 300 | -- | 280 |
| கரட் | 450 | 480 | 500 | 350 | 450 | 500 | 430 |
| பூசணி | 120 | 120 | 120 | 100 | 160 | -- | 100 |
| புடோல் | 200 | 200 | 200 | 230 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 450 | 400 | -- | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | -- | 220 | -- | -- |
| பாகற்காய் | 1300 | 2000 | 2000 | 2000 | 1600 | -- | 850 |
| வெண்டக்காய் | 250 | 150 | 300 | 150 | 300 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 200 | 400 | 400 | -- | 300 |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 250 | 200 | 450 | 250 |
| லீக்ஸ் | 400 | 480 | 500 | 400 | 500 | -- | 380 |
| பீற்றூட் | 350 | 500 | 500 | 350 | 500 | 400 | 480 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 400 | 500 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 450 | 450 | 700 | 600 | 650 |
| போஞ்சி | 650 | 600 | 600 | 450 | 450 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 150 | 300 | -- | 350 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 60 | 150 | 110 | 100 | -- | 120 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 400 | 500 | 450 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 120 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | 350 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 650 | 600 | 800 | -- | 400 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 260 | 200 | 180 | 300 | 250 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | -- | 60 | -- | 40 |
| வல்லாரை | 100 | 70 | 80 | -- | 80 | -- | 45 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | 280 | -- | -- |

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்- வடமராட்சி தென் துன்னையம்பதி ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத சிவபூதேஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் மகோற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் 22ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் நடை பெறும் என ஆலய தர்ம கர்த்தா சபையினர் அறி வித்துள்ளனர். (8)

# இராசிபலன்

10.06.2026
வைகாசி 27, புதன்கிழமை
தசமி முன்னிரவு 8.16 மணிவரை

ரேவதி பின்னிரவு 4.21மணிவரை
சுப நேரம் -4.22-5.52 மணிவரை
இராகு காலம் -11.52-1.22 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தரம்.

**வளவன்**

**மேஷம்**
தொழில் ரீதியான பயணங்கள் கைகூடும், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல் களில் கவனம் தேவை.

**கடகம்**
பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**
வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்**
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், இழுபறியான காரியங்களில் முன்னேற்றமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவ முண்டு.

**கும்பம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்லும் நிலை உருவாகும்.

**மீனம்**
நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், போசன சுகமுண்டு.

மற்றவர்களை நம்பும் அளவுக்கு உன்னையே நீ நம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02

XXII

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்




கி.பி.1622 தொடக்கம் 1624 வரையான காலப்பகுதியில், போர்த்துகேய தளபதியான கான்ஸ்டன் டைன் டி சா டி நெரோன்ஹா கோணேஸ்வர ஆலயத்தை முழுமையாக இடித்தழித்தான்.

ஆலயத்தின் அசல் தூண்களையும் கற்களையும் பயன்படுத்தியே, இன்று நாம் பார்க்கும் பிரடெரிக் கோட்டை (Fort Frederick) கட்டப்பட்டது.ஆலயத்தின் முக்கிய சில விக்கிரகங்கள் மற்றும் உடைமைகள் போர்த்துகேயர்களின் அழிவிலிருந்து காப்பதற்காக, அந்தக் கால பக்தர்களால் கிணறுகளிலும், கடலிலும், நிலத்தடிப் பகுதிகளிலும் மறைத்து வைக்கப்பட்டன. (அவை பிற்காலத்தில் 1950 களில் மீண்டும் கண்டெடுக்கப்பட்டு இப்போதுள்ள ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன).

போர்த்துகேய பாதிரியாரான பெர்னாவ் டி குயிரோஸ் (Fernão de Queyroz) எழுதிய புத்தகத்தில் இந்த வரைபடம் சேர்க்கப்பட்டதால்தான், போர்த்துகேயர்கள் கோட்டையாக மாற்றுவதற்கு முன்பு அந்த அசல் ஆலயம் எப்படி இருந்தது என்ற காட்சி வடிவம் இன்று நமக்குக் கிடைத்துள்ளது. இல்லையெனில், அசல் ஆலயத்தின் தோற்றம் எப்படி இருந்தது என்பது நமக்குத் தெரியாமலேயே போயிருக்கும்.

நமது திருகோணமலை மண்ணின் இழந்த பெருமையைச் சொல்லும் மிக உன்னதமான வரலாற்றுச் சான்று இது.

நன்றி-
கலாநிதி ஆறு.திருமுருகன்.

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜாவிடம் சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் திருகோணமலை திருக்கோணஸ்வரர் ஆலயப் புனரமைப்புத் தொடர்பில் வினவியபோது, இலங்கை அரசாங்கத்தினூடாக கோணேஸ்வரர் ஆலயப் புனரமைப்புத் தொடர்பிலான கோரிக்கையை முன்வையுங்கள் எனத் தூதுவர் கூறியமை ஏற்புடையதா என்பதை இந்தியா ஒரு கணம் பரிசீலிக்க வேண்டும்.

ஆம், திருக்கோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயப் புனரமைப்பில் மிகப் பெரும் தடையாக இருப்பது இலங்கை தொல்லியல் திணைக்களம்.

உண்மையில் தொல்லியல் திணைக்களம் என்பது இலங்கைப் பிரஜைகளுக்கான தன்று, மாறாக அஃது இந்த நாட்டின் பௌத்த சிங்கள மக்களுக்கானது என்பதை பல சந்தர்ப்பங்களில் அந்தத் திணைக்களம் உறுதி செய்துள்ளது.

இது தவிர, திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு இலண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட காண்டாமணிக்கான மணிக்கோபுரத்தை ஆலய வளாகத்தில் அமைப்பதற்குத் தடை விதித்து வருவதும் தொல்லியல் திணைக்களம் என்பதை இந்த இடத்தில் ஏலவே குறிப்பிட்டிந்தோம்.

ஆக, திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்பு மற்றும் மணிக்கோபுர அமைப்பு என எதையுமே செய்ய முடியாத வகையில் தொல்லியல் திணைக்களம் செயற்படுகிற தெனில், அதன் பொருள் தொல்லியல் திணைக் களத்தினூடாக அரசாங்கம் அதனைச் செயற்படுத்துகிற தென்பதேயாம்.

உண்மை. தொல்லியல் திணைக்களத்தின் பணி, தொல்லியல் சான்றுகளை - அதன் அம்சங்களைப் பாதுகாப்பது எனில், காலத்தால் முந்தைய திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் பாதுகாப்பதும் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு அனுமதி வழங்கி ஆலயத்தின் பழமையை வெளிப்படுத்துவதற்குமான ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும்.

ஆம், இலங்கைத் தொல்லியல் திணைக்களம் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அப்படியே அமுக்கி, அங்கு பௌத்த விகாரைகளை அமைத்து இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் அமைத்த திருக்கோணேஸ்வர ஆலயத்தைக் கபளீகரம் செய்வது தான் அதன் திட்டமாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கை அரசாங்கத்தினூடாக திருக்கோணேஸ்வரர் ஆலயப் புனரமைப்புத் தொடர்பான கோரிக்கையை இந்திய மத்திய அரசுக்கு அனுப்பி வையுங்கள் எனக் கூறுவது இந்தியத் தூதுவராலயம் நிலைமையை சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

### யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் பணி

இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணத்தில் அமையப் பெற்றமை யாழ்ப்பாண மக்களுக்கு பெருங்கொடை எனலாம்.

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் அமைந்ததன் காரணமாகவே யாழ்ப்பாண மக்களுக்காக இந்திய மத்திய அரசு திருவள்ளுவர் பண்பாட்டுமையத்தை அமைத்துத் தந்தது.

எனவே யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகம் தமிழ் மக்களின் சமகால நிலைமை தொடர்பில் இந்திய மத்திய அரசிற்குத் தெளிவுபடுத்துகின்ற கடமையைக் கொண்டுள்ளது.

அந்த வகையில், பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயப் புனரமைப்பை இந்திய மத்திய அரசு செய்து, சிவபூமி ஆகிய இலங்கை மண்ணின் ஆதிச் சமயம் சைவம் என்ற வரலாற்று உண்மையை நிலை நிறுத்த வேண்டும். இதற்கு யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகம் உதவும் என நம்பலாம்.

ஆம், எங்கள் திருகோணமலை ஈழத்தமிழர்களின் தலை நகரங்களில் ஒன்று. அங்குள்ள கன்னியா வெந்நீரூற்று என்பது, இராவணேஸ்வரன் தன் தாயாரின் அந்திமக்கிரியைகளுக்காக வெட்டுவித்த ஏழு கிணறுகள் என்கிறது வரலாறு.

இத் துணைக்கும் மேலாக, திருகோணமலையில் உள்ள திருக்கோணஸ்வரர் ஆலயத்தின் தோற்றம் எவ்வாறு இருந்தது என்பதை போர்த்துக்கேய பாதிரியாரான பெர்னாவ் டி குயிரோஷ் (Fernão de Queyroz) எழுதிய புத்தகத்தின் ஊடாக நாம் அறிய முடிகிறது.

இந்த அரிய பொக்கிசம் எங்கள் கோணேஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்பு எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதை சுட்டி நிற்கும்.

ஆம்,அயோத்தியில் இராமஜென்ம பூமியில் பாலஇராமர் வாழ்ந்த இடத்தில் இருந்த பாபர் மசூதியை விலத்தி, இராமருக்கு கோயில் கட்டியதன் மூலம் வரலாற்றைப் பாதுகாக்கின்ற இந்திய மத்திய அரசு, ஈழத்தில் இராவணேஸ்வரன் அமைத்த திருக்கோணேஸ்வரம் எனும் சிவன் தலத்தை புனரமைத்துத் தந்து எங்கள் ஈழத் தமிழ் மக்களின் பன்னெடுங்கால வேணவாவை நிறைவேற்ற வேண்டும்.

இதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தித் துணைத் தூதரகம் உதவ வேண்டும் என்பது இத் தரிசனத்தினூடாக நம் முன்வைக்கின்ற தாழ்மையான கோரிக்கை ஆகும்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

1061





ஜோதிடர் தட்டுத் தடுமாறி, "ஐயா! இந்த ஏழை எளியவனால் தங்களுக்கு என்ன பெரிய உதவி தேவையாயிருக்க முடியும்? இந்தக் குடிசையைத் தேடித் தாங்கள் வந்தது என் முன்னோர் செய்த பாக்கியம். தங்களுடைய அந்தஸ்துக்கு தக்கபடி விருந்து அளிக்க என்னால் இயலாது.

ஆனாலும் இந்தக் குடிசையில் உள்ளவையெல்லாம் தங்களுடையவை தான். தயவு செய்து அமருங்கள், நின்று கொண்டிருக்கிறீர்களே தங்களைப் பார்த்தவுடனே திடுக்கிட்டுப் போனேன். அதனால் தங்களைத் தக்கபடி வரவேற்று உபசரிப்பதற்குத் தவறிவிட்டேன். ஆகா! இந்த எளியவனுடைய குடிசையில் தாங்கள் அமருவதற்குத் தகுதியான ஆசனம் கூட இல்லை. பெரிய மனது செய்து அந்தப் பலகையிலே உட்கார வேண்டும்" என்று சற்று முன் குந்தவையும் வானதியும் உட்கார்ந்திருந்த பலகைகளைச் சுட்டிக் காட்டினார்.

பழுவேட்டரையர் அப்பலகைகளையும் அவற்றின் அருகில் சிந்தியிருந்த மலர்களையும் உற்றுப் பார்த்துவிட்டு, "ஜோதிடரே! இல்லை எனக்கு உட்கார நேரமில்லை. ஏதாவது சாப்பிடுவதற்குக் கொடுக்கக் கூடியது இருந்தால் இலையிலே சுற்றிக் கையிலே கொடுத்து விடுவீர்.

தஞ்சைக்கு அவசரமாக ஒரு செய்தி அனுப்ப வேண்டும் என் சகோதரன் காலாந்தக கண்டனுக்கு ஓலையும், எழுத்தாணியும் தருகிறீரா?. வேண்டாம்! ஓலை எழுதிக் கொண்டிருக்க நேரமில்லை. என் முத்திரை மோதிரத்தைக் கொடுக்கிறேன். அதை எடுத்துக் கொண்டு நீர் தஞ்சாவூர் உடனே போக முடியுமா? அல்லது வாசலில் நின்றானே உமது சீடன், நல்ல தடியனாக இருக்கிறான். அவனை அவசரமாக அனுப்ப முடியுமா?" என்று கேட்டார்.

"தங்கள் கட்டளை எதுவோ, அப்படியே செய்கிறேன். நானும், என் சீடனும், இரண்டு பேரும் வேணுமானாலும் போகிறோம். ஆனால், தனாதிபதி! பெரிய மனது செய்து சிறிது நேரம் இந்த ஏழையின் குடிசையில் அமர்ந்து, இந்த எளியவன் அளிக்கும் அமுதைத் தாங்கள் அருந்திவிட்டுப் போக வேண்டும்!"

"ஜோதிடரே! எதற்காக உம்மை ஏழை என்றும் எளியவன் என்றும் அடிக்கடி சொல்லிக் கொள்கிறீர்? உம்முடைய வீட்டைத் தேடி அரசர்களும், அரசிளங்குமரிகளும் அடிக்கடி வருவதுண்டு என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நான் ஒருவனே உம்மிடம் ஜோதிடம் கேட்க வராதவன். அது தவறு என்பதை உணர்ந்து கொண்டேன். ஒருவேளை உம்மிடம் கேட்டிருந்தால் இம்மாதிரி பயங்கர விபத்துகள் ஏற்படாமலிருந்திருக்கலாம்".

"ஐயா! தங்கள் மொழிகள் எனக்குப் பெரிதும் கவலையைத் தருகின்றன. என்ன விபத்து நேர்ந்தது? தங்களை இந்தக் கோலத்தில் பார்த்ததும் நான் திடுக்கிட்டது சரிதான். புயலிலும், வெள்ளத்திலும் சிக்கிக் கொண்டீர்களா? கொள்ளிடம் உடைப்பு எடுத்துக்கொண்டது என்று கேள்விப்பட்டேன். ஒருவேளை, அதனால்? தனாதிபதி!"

"பழுவூர் இளையராணி சௌக்கியமாயிருக்கிறார்கள் அல்லவா?" என்று ஜோதிடர் கேட்டது, பழுவேட்டரையர் பயங்கரத்தொனியில் சிரித்தார்.

"இல்லை, இல்லை! பழுவூர் இளையராணிக்கு ஒன்றும் நேரவில்லை. அவள் கொள்ளிடத்தில் முழுகிச் செத்துப் போய் விடவில்லை. இது வரையில் கடம்பூர் அரண்மனையில் சௌக்கியமாகவே இருக்க வேண்டும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள்



(நேற்றைய தொடர்ச்சி)

அவளுக்கு எதிரே நூறு குழந்தைகள் அழகாகச் சீருடையணிந்து கொண்டு சிட்டுக் குருவிகளைப் போல் நின்றுகொண்டிருந்தன. அந்தச் சின்னக் குழந்தைகள் இரண்டு கைகளையும் ஒரே நேரத்தில் தலைக்குமேல் தூக்கியும், எதிரில் நீட்டியும், பக்கத்தில் விரித்தும், குனிந்தும், நிமிர்ந்தும் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

வரிசை வரிசையாக அவர்கள் நின்றதும், ஒரேமாதிரியாகக் கைகால்களை அசைத்ததும், ஒரே வரிசையாகத் தொடர்வண்டி போல் ஓடியதும், பூக்கோலம் இட்டது போல் வட்டமாகவும், வளைந்தும் நின்றதும் மரத்தின் மேல் இருந்து பார்க்கும் பொழுது அழகழகாய் இருந்தது.

இத்தப் பள்ளிக் கூடத்தில் எப்படியாவது தன் சிட்டுக் குஞ்சுகளைச் சேர்த்து விட வேண்டும் என்று அம்மாச் சிட்டுக்கு ஆசையாக இருந்தது.

நாள்தோறும் அந்த அம்மாச் சிட்டு இரை தேடப் பள்ளிக் கூடத்தின் வழியாகப் பறந்து போகும் போதெல்லாம் இந்த ஆசை உண்டாகும்.

பள்ளிக் கூடத்தில் சேர்ப்பதென்றால், முதலில் பணம் கட்ட வேண்டும் நன்கொடை கொடுக்க வேண்டும் சீருடை தைக்க வேண்டும் இதற்கெல்லாம் பணம் வேண்டுமே! அந்தச் சிட்டு எங்கே போகும்?

ஒரு நாள் மாலை நேரம். தென்றல் சிலு சிலுவென்று வீசிக்கொண்டிருந்தது. கதிரவன் செம்மஞ்சள் நிறத்தோடு மேற்குத் திசையில் இறங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியை எதிரில் உள்ள புல்வெளியில் நடந்து கொண்டிருந்தாள்.

அம்மாச் சிட்டு அந்த வழியாகப் பறந்து வந்தது. தலைமை ஆசிரியையைப் பார்த்தவுடன், மெல்லக் கீழே இறங்கியது. அவள் நடந்து வரும் போது எதிரில் புல்வெளியில் வந்து நின்று கொண்டது.

'அம்மா அம்மா' என்று கூப்பிட்டது சிட்டு. தலைமையாசிரியை திரும்பிப் பார்த்தாள். யாரும் காணப்படவில்லை. மறுபடியும் சிட்டு 'அம்மா, அம்மா' என்று கூப்பிட் டது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குருதியை உறைய வைக்கும் செம்மணி மனிதப் புதைகுழி

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் போது புதிது புதிதாகக் கண்டறியப்படும் மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கைகளை அறியும் போது, குருதி உறைந்து போகிறது. அந்தளவிற்கு செம்மணி மனிதப் புதைகுழி மிகப் பயங்கரமானதாக உள்ளது.

உண்மை. செம்மணியில் மனிதப் புதைகுழி உண்டென கிருசாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை பெற்றிருந்த லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையில்,

இப்போது செம்மணியில் இடம்பெறும் அகழ்வில் மனித என்புக் கூடுகள் நாளுக்கு நாள் கிடைத்த வண்ணமுள்ளன.

அதிலும் சிறுவர்களின் என்புக் கூடுகளும் உயிரிழந்தவர்களைக் கூட்டாகப் புதைத்ததை வெளிப்படுத்தும் வகையில் என்புக் கூடுகள் குவியலாகவும் கிடைக்கப் பெறுவது எங்கள் மண்ணில் நடந்த அக்கிரமத்தின் சாட்சிய மாகும்.

எனினும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் ஆரம்ப கட்டத்தில் மனித என்புக் கூடுகள் மீட்கப்பட்ட போது, எம்மிடையே இருந்த பதட்டமும் பதகழிப்பும் செம்மணி மனிதப் புதைகுழியை மையப்படுத்திய போராட்டமும் இப்போது தணிந்து விட்டனவோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

உண்மை. செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் மூன்றாம் கட்டத்தின் 20 ஆவது நாள் அகழ்வு நேற்றையதாக இருக்க,

இதுவரையில் செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து 327 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 311 என்புக் கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வானது சாதாரணமான விடயமன்று. இதனை எந்த வகையிலும் நாம் கடந்து செல்ல முடியாது.

அகழ்வு நடப்பது உண்மை. அதில் என்புக் கூடுகள் மீட்கப்படுவது உண்மை. உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் அவர்களின் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் இடம்பெறுவது உண்மை.

ஆயினும் குறித்த செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து எவரும் எதிர்பாராத வகையில் என்புக் கூடுகள் மீட்கப்பட்டு வருவதானது எங்கள் மண்ணில் நடந்த தமிழின அழிப்பின் ஓர் அங்கம் என்பதை சான்றுப்படுத்துகிறது.

எனவே செம்மணி மனிதப் புதைகுழி நீண்டு செல்கிறது. அகழ்வில் கிடைக்கின்ற என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

ஆகையால் இது விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அல்லது சர்வதேச தொண்டு நிறுவனங்களின் அல்லது சர்வதேச நாடுகளின் பிரசன்னம் இருப்பது மிகவும் அவசியம் என்பதை நாம் வலியுறுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

இருந்தும் இது விடயத்தில் நம்மவர்களின் அமைதி எதற்கானது என்பதுதான் புரியாமல் உள்ளது.

ஆகையால், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதான நடவடிக்கைகள் மிகவும் தேவையானவை.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு அதிகாரிகளின் பொறுப்பற்ற செயல்களே மூலகாரணம்

### பிரபல சட்டத்தரணி மைத்திரி காட்டம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையால் இடம் பெற்ற பேரழிவேயன்றி இதன்பின்னால்எந்த மகா சூத்திரதாரியும் கிடையாது எனப் பிரபல சட்டத்தரணி மைத்திரி குணரத்தின தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிவதில் நிலவும் குழறுபடிகள் மற்றும் பாதுகாப்புத் துறையின் பலவீனங்கள் குறித்து அவர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

இந்தக் கோரத் தாக்குதல் நடப்பதற்கு 21 நாட்களுக்கு முன்பே, குறிப்பிட்ட ஒரு நாளில் இவ்வாறானதொரு தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று அரச புலனாய்வுச் சேவைக்கு மிகத் துல்லியமான இரகசியத் தகவல் கிடைத்திருந்தது.

புலனாய்வுப் பிரிவினர் அந்தத் தகவலை உடனடியாகப் பாதுகாப்புச் செயலாளருக்கு அனுப்பியிருந்தனர். அவர் மூலமாக அந்தக் கோப்பு அப்போதைய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

இருப்பினும் நாட்டின் ஒட்டுமொத்தப் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிபர், அந்த அத்தியாவசிய முக்கியத்துவம் வாய்ந்த கோப்பை வெறும் 'தகவலுக்காக' எனக் குறிப்பிட்டுத்தனது கீழ்மட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியிருந்தாரே தவிர, தேவாலயங்களையோ அல்லது பொதுமக்களையோ பாதுகாப்பதற்கான எந்தவொரு தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கையையும் அவர் எடுக்கவில்லை.

சுரேஷ் சலேதான் இந்தத் தாக்குதலுக்கான திட்டத்தைத் தீட்டினார் என்றே ஒரு வாதத்துக்கு வைத்துக் கொண்டாலும் கூட, சர்வதேச ரீதியாகக் கிடைத்த துல்லியமான எச்சரிக்கைத்தகவல்களின் அடிப்படையில் அப்போதைய பொலிஸ்மா அதிபரும் பாதுகாப்புச் செயலாளரும் தங்களது கடமைகளைச் சரியாகச் செய்திருந்தால் இந்தத் தேசியப் பேரழிவைத் தடுத்து 270 இற்கும் மேற்பட்ட உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்துச் சுயாதீன விசாரணை நடத்தி உண்மைகளை வெளிப்படுத்துவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், தற்போது சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ள நிலையில், நாளுக்கு நாள் இந்தத் தாக்குதலின் 'மகா சூத்திரதாரி' என அடையாளப்படுத்தப்படுபவர்கள் அரசியல் தேவைக்கு ஏற்ப மாறிக்கொண்டே இருக்கின்றார்கள்.

எனவே இந்த ஒட்டுமொத்த விவகாரமும் அதிகாரிகளின் கூட்டுப் பொறுப்பற்ற தன்மையால் நேர்ந்த ஒரு பேரழிவே என்று சட்டத்தரணி மைத்திரி குணரத்ன மேலும் தெரிவித்தார். (ந-7)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பக்கச்சார்பற்ற முறையான விசாரணைகளே அவசியம்

### பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலாலும் அதன் பின்னரான சூழலாலும் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நியாயமான நீதி வழங்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆனால் முறையான விசாரணைகளின்றி தன்னிச்சையாக நபர்களைக் கைது செய்து பழிவாங்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது கருத்து ரைத்த அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும். சட்டத்தின்படி செயற்படுங்கள் தற்போதைய அரசின்சில நகர்வுகள்வெறும் அரசியல் பழிவாங்கலாகவே பார்க்க முடிகின்றது.

இந்தக் கோரத் தாக்குதலுடன் தொடர்புடைய உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதைச் சான்றுகளுடன் வெளிக்கொண்டு வருவதை விடுத்து, தங்களுக்குப் பிடிக்காத யாரையாவது ஒருவரைக் கைது செய்து, அவரே பிரதான சூத்திரதாரி எனப் பகிரங்கமாகத் தீர்ப்பளிக்கவே தற்பொழுது சில தரப்பினர் திட்டமிட்டு முயற்சித்து வருகின்றனர்.

நாங்கள் இங்கு சுரேஷ் சலே என்ற தனிநபரைப் பற்றி மட்டும் பேசவில்லை. நாட்டின் எந்தவொரு பிரஜையாக இருந்தாலும், அவர் பாதுகாப்புப் பிரிவு உயர் அதிகாரியாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு எதிராக முறையான மற்றும் சட்டபூர்வமான விசாரணைகள் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.

எவ்வித அரசியல் உள்நோக்கமும் இன்றி நாட்டின் பொதுச் சட்டத்துக்கு அமையவே அனைத்து நகர்வுகளும் எடுக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் மிகவும் தெளிவாக வலியுறுத்துகிறோம் என்றார். (ந-7)

## தூய ஒளி வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி மண்டைதீவுக் கடலில் மரணித்த 31 மீனவர்களின் 40 ஆவது ஆண்டினை நினைவு கூரும் விதமாக குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் தூய ஒளி வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஆரம்பம் இன்று(10) பிற்பகல் 3.00 மணியளவில் குருநகர் சென்.ஜேம்ஸ் பாடும் மீன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ந-7)

## ஒன்லைன் மோசடி இளம் பெண் கைது

அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நாமம் ஒன்றை போலியாகப் பயன்படுத்தி இணையத்தளம் மூலம் அதிக வருமானம் ஈட்ட முடியும் எனக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கம்பஹா, உடுகம்பொல பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் பெண் ஆவார்.

பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உணவு பொதி செய்வதில் மீள் சுழற்சியிலான பிளாஸ்ரிக்கின் தாக்கம்



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உணவு பொதிசெய்வதற்காக பலவகையான பொருட்கள் பாவனையிலுள்ள போதிலும் மலிவானதும் இலகுவானதுமான பிளாஸ்ரிக் பொருட்கள் பொதுவாகவே பயன்படுத்தப்படுகின்றனர். "லஞ் சீட்" பொதுவாக உணவு பொதிசெய்யப் பயன்படும் ஒரு வகை பொலித்தீனான குறைந்த அடர்த்தியான பொலி எதிலீன் (Low Density Polyethylene) என்னும் வேதியல் பொருளிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. இதனை உற்பத்தி செய்வதில் மீள்சுழற்சி செய்யப்பட்ட பொலித்தீன் பயன்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் ஏலவே பயன்படுத்தப்பட்ட பொலித்தீனில் நுண்ணங்கி தொற்றுக்கள் அதிகமாக இருக்கும். அவற்றிலிருந்து வேறு பொருட்கள் தயாரிக்கப்படும் போது அதுவும் உணவினைப் பொதிசெய்ய பயன்படுத்தும் பொருட்களை தயாரிக்கும் போது எப்படியும் இந்த நுண்ணங்கித் தொற்று உணவில் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமே. மாறாக, சொப்பிங் பையை மீள் சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்களை பயன்படுத்தியே உருவாக்கப்படுகின்றன.

அதனால் சொப்பிங் பைகளில் உணவை பொதிசெய்வதோ அல்லது உணவுப்பொருட்களை திறந்தபடி கொண்டு செல்வதோ சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கும்.

பிளாஸ்ரிக்கிலிருந்து முதன் முறையாக பிளாஸ்ரிக் பொருட்கள் குறிப்பாக உணவு பொதி செய்வதற்கான பிளாஸ்ரிக் சீற்றுக்கள் தயாரிக்கும் போது அதில் எந்த விதமான தொற்றுக்களும் காணப்படாது ஆனால் அதனை கழுவியோ அல்லது மீள பயன்படுத்தும் போது நுண்ணங்கித் தொற்றுக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகும்.

இதனை ஆய்வின் மூலம் நிரூபித்தும் இருக்கின்றனர். குறிப்பாக மீளப் பயன்படுத்தும் பிளாஸ்ரிக்களை வேதியியல் முறைமைகளுக்கூடாக மீண்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் பொருட்களாக மாற்றுவதன் மூலம் அவற்றை சந்தையில் மக்கள் வாங்கி பயன்படுத்த முடிகின்றது. ஆனால் இவ்வாறான பிளாஸ்ரிக்குகளை உணவுகளை நேரடியாக வைத்து பொதி செய்ய அனுமதிக்கக்கூடாது. உணவு பொதிசெய்வதற்காக பிரத்தியேகமான இலகுவில் உக்கக் கூடிய தனித்துவமான பிளாஸ்ரிக்குகள் சந்தையில் உண்டு. சற்று விலையானாலும் நுண்ணங்கித் தொற்றுக்கள் ஏற்படாதென்பதனால் இவற்றினால் உணவுகளை பொதிசெய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பிளாஸ்ரிக்குகளை தவிர்த்து சேதன வகை பொதி செய்யும் தாவரங்களின் இலைகளைச் சிறப்பாக பயன்படுத்தலாம். வாழையிலை, தேக்கு இலை, கமுகு அல்லது பாக்கு மடல், வாழைத்தார் /வாழைமடல் இன்னும் ஏனைய தாவரங்களின் பாகங்களை பயன்படுத்துவதற்கான வழிவகைகளை கண்டுபிடித்தால் நல்லது. பிளாஸ்ரிக்கினை மீள் சுழற்சி செய்து உருவாகும் பொலிஎதிலீன் பிளாஸ்ரிக்கின் மூலம் பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவம் வெற்றிய அளித்தாலும் அந்தவகை பிளாஸ்ரிக்கினை உணவு பொதியிடல் அல்லது உணவை சுற்றுவதற்கு நேரடியாக பயன்படுத்தக் கூடாது. இந்த விடயங்கள் மக்களுக்கு தெரியப்படுத்தாததினால் அவர்கள் கழிவான பொலித்தீனை பயன்படுத்த முற்படுகின்றார்கள். இவ்வகை பொலித்தீன்களை கழுவி பயன்படுத்த முடியாது. கழுவுவதால் அதில் உள்ள உணவுப்பொருட்கள் முழுமையாக அகற்றப்படாது அது பக்ரீரியா நுண்ணங்கித் தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டுவிடும். மேலும் பிளாஸ்ரிக் வகைகளினால் வேதியியல் பொருட்களும் நாளடைவில் உணவுடன் கலக்க ஏதுவாக இருப்பதனால் மீள் சுழற்சிக்குட்படும் பிளாஸ்ரிக்குகளை வேறு தேவைகளுக்காக பொதி செய்வதற்கு பயன்படுத்தலாம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



இந்த வேறுபாட்டையும் விளைவுகளையும் மக்களிடம் எடுத்துச் செல்வது மிக மிக அவசியமாதலால் இது சார்ந்த அனைவரும் இப் பிளாஸ்ரிக் கழிவு பற்றிய அறிவை நண்பர்களுக்கு ஏனையவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். ஒரு முறை பயன்படுத்திய பிளாஸ்ரிக்குகளை மீண்டும் மீண்டும் கழுவி பயன்படுத்தாதீர்கள்.

இன்னொருபுறம் பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களை மக்கள் மீண்டும் கழுவி பயன்படுத்துவதனைக் காணலாம். நீர் தேக்கி வைப்பதற்காக பயன்படுத்தப்படும் ஒரு முறை பயன்படும் இவ்வகைப் போத்தல்கள் பயன்பாட்டின்போது நசிந்தும் நெளிந்தும் காணப்படுகின்றன.

அவ்வாறு காணப்படும் பிளாஸ்ரிக் போத்தல்களிலிருந்து உட்பக்கமாக நுண்பிளாஸ்ரிக் துகள்கள் வெளிக்கிளம்பி தண்ணீரில் கலந்துவிடுவதனால் அவற்றினாலான சுகாதாரப் பிரச்சினை அதிகமாகவே நுகரப்படுகின்றது. நுண்பிளாஸ்ரிக் துகள்கள் கண்ணுக்கு தெரியாதவையாதலால் நாம் பயன்படுத்தும் பாத்திரம் பிளாஸ்ரிக்கினாலானதென்றால் கவனமாக பயன்படுத்தல் வேண்டும். இத் துகள்களால் பலவகையான நோய்கள் உருவாவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. பலமுறை கழுவி நசிந்து நெளிந்து காணப்படும் பிளாஸ்ரிக் போத்தல்களில் நீரினை எடுத்து குடிப்பதற்கு பயன்படுத்துவதனை தவிர்ப்பது நல்லது. தற்சமயம் நோய் வருவதற்கான காரணிகள் பலவாக இருப்பதனால் எமது உடற்சுகாதாரத்தை நாமே பாதுகாத்துக் கொள்வது மிக மிக அவசியமானதாகும்.

மேலும் பிளாஸ்ரிக் பைகளில், போத்தல்களில் உள்ள வர்ணங்கள் கழன்று நாம் பயன்படுத்தும் தண்ணீருக்குள் வந்துவிடுவதற்கான சாத்தியம் அதிகமாகவே உணரப்பட்ட நிலையில் இவ்வாறான வர்ணங்கள் கொண்ட பிளாஸ்ரிக் போத்தல்களை பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாக இருத்தல் அவசியமானதாகும். அலட்சியப்படுத்திவிட்டு பின்னர் நொந்து எந்த பிரயோசனமும் இல்லை. மீள்சுழற்சிக்குட்படும் பிளாஸ்ரிக் பொருட்களினை மீள்சுழற்சி முறைக்குள் உட்புகுத்தும் போது அதிலிருந்து துர்நாற்றம் உருவாவதனைக் காணலாம்.

அத்துடன் அந்த துர்நாற்றம் இலகுவில் கழுவுவதன் மூலம் போத்தலிலிருந்து அகற்றப்படமாட்டாது. ஆதலினால் அவ்வகையான போத்தல்களில் சேமிக்கப்படும் பால், குடிநீர் மற்றும் ஏனைய திரவ உணவுப் பொருட்கள் பிளாஸ்ரிக் போத்தலின் அந்த மணத்தை பெற்றுக்கொள்ளும். இதன்மூலம் உணவுப் பதார்த்தம் கெட்டுப்போவதற்கு இது காரணமாகிவிடும். உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வற்கு குறிப்பாக உண்ணக் கூடிய நிலையிலுள்ள உணவுகளை அவதானமாக சரியான பாத்திரங்களில் எடுத்துச் செல்வது உகந்தது.

இவற்றைத் தவிர்த்து குறிப்பாக ஜெல் போன்ற உணவு வகைகளை இத்தகைய போத்தல்களில் சேமித்தால் அவற்றின் மணம் தன்மை என்பன கேள்விக் குறியாகிவிடும். ஆக மொத்தத்தில் பிளாஸ்ரிக் பொருட்களை பயன்படுத்துவதை நாம் குறைத்துக் கொள்வதுடன் நாமாக சேதன முறையில் துணிப்பைகளை எடுத்துச் சென்று பொருட்களை கொள்வனவு செய்வது மிகவும் சிறந்தது. உணவுகளை நல்ல பொலித்தீனினால் சுற்றிவிட்டு அதற்கு மேலாக மீள்சுழற்சி செய்யப்பட்ட பொலித்தீன் பைகளை பொதி செய்த உணவுகளை சேமிக்க பயன்படுத்த முடியும். தற்சமயம் பொலித்தீனின் பாவனையை கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகளை பாராட்டுவதுடன் அதற்கான மாற்று வழிகளையும் உருவாக்குவதில் நாம் கவனஞ் செலுத்துதல் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அவசர காலநிலை...

நேற்று பாராளுமன்றில் இடம்பெற்றது.

இதன்போது அவசரகால நிலையை நீடிப்பதற்கு ஆதரவாக 135 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்ததுடன், அதற்கு எதிராக 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே வாக்களித்துள்ளனர்.

இதன்படி, 128 மேலதிக வாக்குகளினால் இந்த அவசரகால நிலை நீடிப்புக்கான பிரேரணை நிறைவேறியுள்ளது. (ந-7)

## மின்சாரம்...

தொழிலகத்தில் நேற்றுக் காலை (09) தொழில் புரிந்து கொண்டிருந்த இளைஞன் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி நகரைச் சேர்ந்த சிவகுருநாதன் சாரங்கன் என்ற 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்டபொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ந-7,316)

## சிறுவர்...

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களைப் பொறுத்தமட்டில் எமது அரசாங்கம் ஒருபோதும் குற்றவாளிகளைப் பாதுகாக்காது. ஒருவர் எந்தத் தொழிலைப் புரிபவராக இருந்தாலும் அவர் குற்றமிழைத்திருந்தால் உரிய விசாரணைகளின் பிரகாரம் அவர் நீதியின் முன்நிறுத்தப்படுவார் எனத் தெரிவித்துள்ளார். (ந-7)

## விசாரணை...

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பான விசாரணை செயன்முறை குறித்து ஏனையோரை விடவும் புலனாய்வுப்பிரிவு பிரதானியாகப் பதவி வகித்த சுரேஷ் சலேயுக்கு நன்கு தெரியும். அவர் உண்மையிலேயே எந்தவொரு குற்றத்தையும் புரியவில்லை என்றால் இந்த விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதே அவர் செய்யக்கூடிய சிறந்த விடயமாகும். மாறாக அவர் ஏனைய தரப்புக்களுடன் இணைந்து விசாரணை செயன்முறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுப்பதனால் இத்தாக்குதல்களுடன் அவருக்குத் தொடர்பு இருக்கக்கூடுமோ எனும் சந்தேகம் எழுகிறது என்றார். (ந-7)

## சுரேஷ் சலே...

சுரேஷ் சலேவின் உறவினர்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அதன் ஆணையாளர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதன்படி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சென்ற ஆணைக்குழு அதிகாரிகள் சுரேஷ் சலேயிடம் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துள்ளதுடன், அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கூண்டுக்கு அருகில் இருந்த ஏனைய சந்தேகநபர்களிடமிருந்தும் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

மேலும், சுரேஷ் சலேவின் நிலைமை குறித்துக் கண்டறிவதற்காக நேற்று முன்தினம் (08) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுரேஷ் சலே தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளை கடந்த வாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வருமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தங்களால் அன்றைய தினம் வர முடியாது எனத் தெரிவித்து அவர்கள் வேறு ஒரு திகதியைக் கோரியிருந்தனர்.

இதற்கமைய, குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவொன்றை இந்த வாரத்திற்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அதன் ஆணையாளர் நிமல் ஜி.புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## சரண குணவர்த்...

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்த நான்கு வழக்குகளிலும் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவுக்கு குற்றச்சாட்டு ஒன்றுக்கு நான்கு ஆண்டுகள் வீதம் மொத்தம் 16 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹாயில் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, அந்த வழக்குகளுக்காக சரண குணவர்தனவுக்கு 18 இலட்சம் ரூபா அபராதமும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராகப் பணியாற்றிய காலத்தில், அந்த நிறுவனத்திற்காக மூன்று வாகனங்களைவாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட போது, அவற்றின் உரிமையாளர்களுக்குச் சாதகமாகச் செயற்பட்டு அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியமை தொடர்பிலேயே இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் சரண குணவர்தனவுக்கு எதிராக இந்த நான்கு வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பொலிஸ்...

நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது, பாடகர் சங்கீத்தன் தொடர்பில் அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. இருப்பினும் யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கான உரிமை காணப்படுகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பில் பாடல் பாடி, அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்தமைக்காகவே கிளிநொச்சி இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது தொடர்பில் பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார். இதன் பின்னர் சாதகமான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2026.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 6213 — A 6 7 7 4 0 7
அத சம்பத — A 7 4 0 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0788

சுப தவசக் — திகதி 2026.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 6329 — மீனம் 16 18 47 — 7322

தன நிதானய — திகதி - 2026.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் - 2243 — Y 22 54 70 81 Y

மெகா பவர் — திகதி 09/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2561 — M 21 34 40 75 76

ஜய — திகதி 2026.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0481 — H 7 9 7 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4455 — சீட்டிழுப்பு திகதி 09.06.2026 — X 34 45 59 66

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 1522 — துலாம் 06 42 56 59 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 09.06.2026 — வெற்றி வாரம் 0921 — K 6 3 8 8 1 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,983,766.80

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3187 — 25000 பணப் பரிசு 45353 — சீட்டிழுப்பு திகதி 2026.06.09 — தினம் செவ்வாய்க்கிழமை — 30 34 60 71 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.132,833,825.60

சனிதா — திகதி 09.06.2026 — வெற்றி வாரம் 5348 — 11 20 23 37 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,274,576.80 — 12598

சசிரி — வெற்றி வாரம் 1017 — சீட்டிழுப்பு திகதி 09.06.2026 — செவ்வாய்க்கிழமை — 04 26 39 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,128,720.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4899 — சீட்டிழுப்பு திகதி 09.06.2026 — தினம் செவ்வாய்க்கிழமை — 23 36 39 46 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,340,827.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — M 14 09 23 31 42 — 2363 — 09.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.288,446,788.40

அட கோடீபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 3013 — சீட்டிழுப்பு திகதி 2026.06.09 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,177,123.20 — 09 20 35 36 I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முள்ளிவாய்க்காலில் சிந்திய உதிரமே இளைஞர்களிடம் இசையாய் மலர்கிறது

## தமிழக அமைச்சர் வன்னி அரசு

முள்ளிவாய்க்கால் மண்ணில் சிந்திய இரத்தத்திலிருந்து உணர்வலைகளாக இளைஞர்கள் எழுந்து வருகிறார்கள் என்று தமிழ்நாட்டின் சமூகநலத்துறை அமைச்சரும் விடுதலைச் சிறுத்தை கட்சியின் துணைப் பொதுச் செயலாளருமான வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

சொல்லிசைப் பாடகர் சங்கீத்தன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அவர் நேற்று (9) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிங்கள பௌத்த பேரின வாதத்தின் ஒடுக்குமுறை இன்னும் தொடர்வதன் சாட்சியம் தான் சங்கீத்தன் அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்திருப்பது. இடதுசாரி அரசியலை முன்னெடுப்பதாகக் கூறி உலக அரங்கில் மக்களை ஏமாற்றிவரும் போக்கைத் தான் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி அரசு செய்து வருகிறது.

தமிழீழ மக்களை இனப் படுகொலை செய்த ராஜபக்‌ஷவின் தொடர் அரசாகத்தான் அநுர அரசும் செயற்படுகிறது என்பது அம்பலமாகியுள்ளது. தமிழீழ இளைஞர்கள் இன்று தமிழீழ விடுதலைக்கான குரலாக எழுந்து வருவதை ஒடுக்கும் போக்கை இலங்கை அரசு நிறுத்த வேண்டும். தமிழீழ மக்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கருவியாக பயன்படுத்துவதை ஏற்க முடியாது.

ஆகவே, உடனடியாக அவரை விடுதலை செய்ய வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் வலியுறுத்துகிறோம் என்றுள்ளது. (ந-7)

## பயங்கரவாத...

பாராளுமன்றில் நேற்று (9) இடம் பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவசர கால நீடிப்புத் தொடர்பான நேற்றைய விவாதத்தின் போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பயன்பாடு தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர், குறித்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் வாக்குறுதியை வழங்கியே அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

தற்போதும் அந்த நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கின்றது. விரைவில் குறித்த சட்டத்தை நீக்குவதற்கு நீதி அமைச்சு உள்ளிட்ட துறைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

எனினும் நாட்டின் அமைதியை சீர்குலைக்கும் வகையிலும் பல உயிர்ப் பலிகளை ஏற்படுத்திய மிலேச்சத்தனமான பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியையும் அதன் பின்னணியையும் கண்டறிவதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தியது ஒரு குற்றமா? என கேள்வி எழுப்புகிறோம்.

எனவே ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களை கைது செய்வதற்காக தற்போது நடைமுறையில் உள்ள இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

அத்துடன் விரைவில் குறித்த சட்டங்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றார். (ந-7)

# சங்கீத்தனுக்கு நீதிமன்றம் பிணை வழங்க முடியும்

தாயகப்பாடல் பதிவேற்றம் தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சொல்லிசைப் பாடகர் சங்கீத்தனை சாதாரண நீதிமன்ற நடவடிக்கைகளூடாக பிணையில் விடுவிக்க முடியும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியியைச் சேர்ந்த இளம் சொல்லிசைப் பாடகர் சங்கீத்தன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை தொடர்பில் நேற்று (9) பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி இளைஞனுக்கு இன்னும் "தடுப்புக் காவல் உத்தரவு" பிறப்பிக்கப்படவில்லை. எனவே நீதிமன்றத்தை நாடி பிணை பெற்றுக்கொள்ள முடியும் என்றார். (ந-7)

## நான் சிறைவாசம்...

தெரிவித்துள்ளார்.

மதுபோத்தலுக்கும் சோற்றுப் பார்சலுக்கும் மற்றும் ஆயிரம் ரூபாய் பணத்திற்கும் சமூக ஊடகங்கள் வாயிலாக வதந்திகளைப் பரப்பி, ராஜபக்‌ஷக்களுக்கு முட்டுக்கொடுக்கும் நபர்கள் குறித்துக் குறிப்பிட்ட அவர், தனக்கு நேர்ந்த அரசியல் பழிவாங்கல்களின் பின்னணியில் இருந்தவர்களை அம்பலப்படுத்தியுள்ளார்.

எவ்விதக் குற்றச்சாட்டுகளோ அல்லது முறையான நீதிமன்ற விசாரணைகளோ இன்றி, என்னைக் கடற்படைத் தலைமையகத்தில் சுமார் 8 மாதங்கள் தொடர்ச்சியாகத் தடுத்து வைத்திருந்தார்கள் எனக்கூறிய பொன்சேகா,

ஜன்னல்கள் மற்றும் கதவுகள், பலகைகளால் அடைக்கப்பட்ட ஒரு சிறிய அறையிலேயே நான் அடைத்து வைக்கப்பட்டிருந்தேன் என்றார்.

சிறைச்சாலைகள் மற்றும் தடுப்புக் காவல் முகாம்களில் இருப்பவர்களின் அனுபவங்கள் என்ன என்பது குறித்த முழுமையான அறிவும் அனுபவமும் சலேவுக்கு உண்டு எனக் குறிப்பிட்ட அவர் சலே, கபில ஹெந்தவிதாரண போன்றவர்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொண்டே கோட்டாபய ராஜபக்‌ஷ என்னைச் சிறையில் அடைத்துப் பழிவாங்கினார்.

இந்தப் பழிவாங்கல் நடவடிக்கைகள் என் மீது மட்டுமன்றி, எனது குடும்பத்தினர் மீதும் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டதாகக் கவலை வெளியிட்டுள்ள அவர், தான் கைது செய்யப்பட்ட தினத்தன்று, தனது மனைவியை அதிகாலை 4 மணிவரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளார். (ந-7)


## மணப்பெண் தேவை

1. அத்தியடி, இந்து, 1988, அஸ்வினி, CIMA Fully qualified wistom Masters finished, CPA, Finance manager, Australia citizen divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58669)
2. கோண்டாவில், இந்து, 1993, உத்தரம், BSc in Civil and Structural Engineering, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58653)
3. அளவெட்டி - வட்டுக்கோட்டை, இந்து, 1992, மகம், MSc in project management at liverpool Jhon Moores University, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54213)
4. கரவெட்டி, இந்து, 1989, உத்தரட்டாதி, Bio medical and Electrical engineering, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (33630)
5. பருத்தித்துறை, இந்து, 1991, விசாகம், Bachelor of civil engineering, Singapore citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57977)
6. இணுவில், இந்து, 1994, திருவோணம், Bachelor of civil engineering, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54449)
7. நல்லூர், இந்து, 1995, ரேவதி, MSc Software Engineering (UK), UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54570)
8. மானிப்பாய், இந்து, 1996, உத்தரட்டாதி, Electrical engineer, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53363)
9. அச்சுவேலி, இந்து, 1997, சுவாதி, BSc Electical and Electronic Engineering, Netherlands citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(57345)
10. சுன்னாகம், இந்து, 1998, கேட்டை, Machinical Engineering, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57973)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-5809)

S.Sharma J.P www.thaalee.com 077 189 0367 077 539 3728



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5810) 076 825 7716 (ஆகாஸ்)



## பல்வகைத்தன்மையே இலங்கையின் பலம்

பல மதங்கள், இனங்கள் மற்றும் கலாசாரங்களால் இலங்கை வலிமையாக உள்ளது.

வேறுபாடுகளை ஆயுதமாக மாற்றுவதன் மூலம் வெறுப்புப் பேச்சு இவ் அடித்தளத்தை அச்சுறுத்துகிறது.

எங்களைப் பிரிக்கும் கருத்துக்களை நிராகரிப்போம். மரியாதை, இணக்கம் மற்றும் ஒற்றுமையைத் தெரிவு செய்வோம்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)



## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு உணவு பரிமாறுபவர்/ சுத்திகரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு : 076 830 3931 (7820)



## வேலையாள் தேவை

பருத்தித்துறைப்பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரையும் வீட்டையும் தங்கியிருந்து பராமரிக்க நேர்மையான பெண் வேலையாள் தேவை. நீண்ட நாட்களுக்கு நின்று வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (2403)

தொடர்புகளுக்கு: 076 622 7803



## வேலையாட்கள் தேவை

சிற்றுண்டிச்சாலை வேலை (ரொட்டி, ரோல், வடை, உணவுப் பண்டங்கள்) உற்பத்தி செய்யக்கூடிய வேலையாள் ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் 90 ஆயிரம் ரூபாய் – ஒரு லட்சத்து 10 ஆயிரம் வரையும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் – ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய், ( பழகுபவர்களுக்கு 50 ஆயிரம் ) வரையும் வழங்கப்படும். சகல வேலைகளும் தெரிந்தவராக இருக்க வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். (C-5808)

தொடர்புகளுக்கு : 077 378 5687


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org